# அன்பு மக்களே!

தமிழ்க் கத்தோலிக்க மாதாந்த வெளியீடு மார்கழி 2016, ஒளி 23, கதிர் 228

TAMIL CATHOLIC MONTHLY PUBLICATION December 2016 YEAR 23 VOL 228



# தமிழ் திருப்பலிகள் நடைபெறும் இடங்கள்

## புனித லூர்து மாதா தேவாலயம் டவுன்ரவுன்

கிறிஸ்து பிறப்பு பெருவிழா திருப்பலி

**Saturday night. Christmas Eve** 8.00 pm

கரோல் பாடல் நடைபெறும் மாலை 8:30 மணிக்கும் திருப்பலி நடைபெறும்.

மார்கழி / Dec 25 வழமையான பிற்பகல் ஐந்து மனி பூசை இருக்காது.

மார்கழி / Dec 31 புத்தாண்டு திருப்பலி

மாலை 11:00 மணிக்கு திருமணித்தியாலமும் திருநாள் திருப்பலியும்

தை / Jan 1 **New Year Day** வழமையான பிற்பகல் ஐந்து மனி பூசை இருக்காது

## ஸ்காபரோ மரியாவின் மாசற்ற இருதய ஆலயம்

கிறிஸ்து பிறப்பு பெருவிழா திருப்பலி

**Christmas Eve**

மாலை 7:00 மணிக்கும் நள்ளிரவு 12:00 மணிக்கு

மார்கழி / Dec 25

கிறிஸ்து பிறப்பு பெருவிழா திருப்பலி

**Christmas Day**

மதியம் 12:00 மணி

மார்கழி / Dec 31

புத்தாண்டு திருவிழிப்பு திருப்பலி

**New Year Eve**

மாலை 7:00 மணிக்கும்

மாலை 11:00 மணிக்கு திருமணித்தியாலமும் திருநாள் திருப்பலியும்

தை / Jan 1

புத்தாண்டு திருப்பலி

**New Year Day**

மதியம் 12:30 மணி

## மிஸசாகா தூய எயார்வேஸ் அன்னை ஆலயம்

மார்கழி / Dec 24

கிறிஸ்து பிறப்பு பெருவிழா திருப்பலி

**Christmas Eve**

மாலை 9:00 மணி

மார்கழி / Dec 31

புத்தாண்டு திருவிழிப்பு திருப்பலி

**New Year Eve**

மாலை 10:00 மணிக்கு திருமணித்தியாலமும் திருநாள் திருப்பலியும்

## நோர்த் ஜோர்க் தூய பிலிப் நேரி ஆலயம்

மார்கழி / Dec 24

கிறிஸ்து பிறப்பு பெருவிழா திருப்பலி

**Christmas Eve**

மாலை 7:00 மணி

மார்கழி / Dec 31

புத்தாண்டு திருவிழிப்பு திருப்பலி

**New Year Eve**

மாலை 9:00 மணிக்கு திருமணித்தியாலமும் திருநாள் திருப்பலியும்

# ஸ்தாபிதம்

ஆனிமாதம் 1995



## முகவரி

2625 Eglinton Ave EastUnit # 2nd floor
Scarborough. On. M1K 2S5

E-mail:-
Tamilcatholicpublication@gmail.com

தொலை பேசி (416) 265 - 5540
தொலைநகல் (647) 348 - 5100




ஆசிரியர் உரை

# நம்பிக்கை நிஜமாகின்றது

வருடா வருடம் காலங்கள் மாறுகின்றன, காட்சிகள் மாறுகின்றன. புதுப் புதுக் கண்டு பிடிப்புக்கள் பூமியில் குவிந்த வண்ணம் இருக்கின்றன. மனித வாழிவில் பிறப்பு, முதிர்வு என்று வயதெல்லைகள் முன் நோக்கி நகர்கின்றன.

இவ்வேளைகளில் வருடா வருடம் நாம் சில நினைவுகளைப் பின் நோக்கிப் பார்த்து, அவ் உணர்வுகளோடு ஒன்றித்து அதனுள் ஐய்க்கியமாகி விடுகின்றோம்.

முன்னொரு காலத்தில் இறைவன் நேரடியாகப் பேசினார். பின்னர் இறை வாக்கினரூடாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாகவும், வானதூதர்கள் மூலமாகவும் இறைவாக்குக்கள் பரிமாறப் பட்டன. அவர்கள் மெசியாவன் வருகைக்காகக் காத்து இருந்தார்கள். காலப் போக்கில் இறைவன் நேரடியாகவே மக்களோடு மக்களாய் வாழ்ந்து மக்களோடு பேசினார்.

இயேசுவின் பிறப்பு மனிதர் ஒவ்வொருவரையும் மெய் சிலிர்க்க வைக்கும் நிகழ்வு. அந்த நாளை நாம் ஒளி விழாவாகக் கொண்டாடுகின்றோம். வானில் தோன்றிய 'இளஞாயிறு' கிறிஸ்து மெசியாவின் சிறப்புப் பெயர் இது. 'இளந் தளிர்' என்றும் இவர் அழைக்கப் படுகின்றார். இவ் இரண்டு சிறப்புப் பெயர்களும் நம்பிக்கை தரும் சின்னங்கள். கிறிஸ்து பிறப்பில் நம்பிக்கை நிஜமாகின்றது. தெய்வம் மனிதனானது. தெய்வ மகன் ஒளி விழா மூலம் மக்களோடு உறவாடத் தொடங்குகிறார்.

தேவதூதனின் வார்த்தைக்கு அன்னை மரியாள் அடி பணிகின்றாள். தூய ஆவியானவர் கொடுத்த அன்பளிப்பை பூரணமாக ஏற்று அகமகிழ்கின்றாள். குழந்தை வயிற்றில் துள்ளும் போது எல்லை யில்லா மகிழ்வில் திளைக்கின்றாள்.

துன்பங்கள் துரத்தியடிக்கின்றது. பேறு காலத்திலும் நீண்டவளிப் பயணம். தட்டப் பட்ட கதவுகள் திறக்கப் படவில்லை. கிடைத்ததோ மாட்டுத் தொழுவம். நைந்த வைக்கோலில் மைந்தன் அவதரித்தார்

அரூபி உருவமானது. நித்தியம் காலமாகிறது. நம்பிக்கை நிஜமாகின்றது. ஞானம் குழந்தை யாகின்றது. தெய்வம் மனிதனானது. இறைவன் நம்மோடு வந்து பிறக்கின்றார்.

இறைவன் தம் மக்களைத் தேடி வந்து விடுதலையளித்தார். கடவுளின் சாயலாகப் படைக்கப் பட்டநாம் ஒவ்வொருவரும் அதன் அடையாளச் சின்னமாக மாறவேண்டும். துன்பத்தில் துவண்டு போய் கிடக்கும் ஒருவனுக்கு இதய சுத்தியுடனும் பாசத்துடனும் உதவி செய்து பார். அந்த முகத்தில் தெரியும் பிரகாசம், அந்தக் கண்களில் துளிர்த்திடும் நீர்த் துளிகள், அவன் தனது இரு கைகளையும் சேர்த்து உனக்குப் போடும் கும்பிடு, உன்னை மெய் சிலிர்க்க வைத்து விடும். உன்னை அவன் கடவுளின் சாயலாகப் பார்க்கின்றான். உன் பார்வைக்குள் அவனுடைய நெகுழ்ச்சியான தருணம் புகுந்து உன் உணர் வுகளைச் சூடேற்றினால்....அங்கு நீ மனித நேயத்தை உணருகின்றாய் பிறப்பின் பலனை அடைகின்றாய்.

**"உலகுக்கு ஒளி நீங்கள். உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்வதாக"**

மத் - 5 – 14 – 16

உலக சமாதானத்தை நோக்கிப் பயணிப்போம்.

## அனைவருக்கும்
## நத்தார் புதுவருட வாழ்த்துக்களோடு, எமது பொங்கல் வாழ்த்துக்களும்.



## சங்கைக்குரிய சகோ

## லூர்துமேரி தோமாஸ்.25தாவது ஆண்டு யூபிலி

இருபத்தைந்தாவது ஆண்டு திருப்பனியின் நிறைவை ஐயர்லண்ட் நாட்டில் மிகவும் சிறப்பாக கொண்டாடினார்கள் இவர் இரணைமாதா நகர் பங்கைச் சார்ந்தவராகவும் மன்னார் திருக்குடும்பக்கன்னியர் மடத்திலும், இளவாலை திருக்குடும்பக்கன்னியர் மடத்திலும் ஆரம்பகாலத்தில் கல்வி கற்று உயர்தர வகுப்புகளை பாக்கிஸ்த்தானிலும் இப்போது ஐயர்லண்டிலும் முதுநிலைப் பட்டமும் பெற்றுள்ளார். இவரது திருப்பனி காலங்களில் பத்துவருடங்கள் பாக்கிஸ்த்தானிலும் அதைத்தொடர்ந்து ஐயாலண்டிலும் பதினைந்து வருடங்கள் பனிபுரிந்து வருகிறார் இவரது சகோதரி சங்கைக்குரிய மரியறோஸ் தோமாஸ் நுவேரேவியாவிலும் இருவரும் பிரான்சிஸக்கன் மேரி மிசனறி சபையில் பனிபுரிகிறார்கள் அத்துடன் இவரது சகோதரன் அருட் தந்தை அந்தோனிப்பிள்ளை தோமாஸ் அமதி கனடாவில் பனிபுரிகிறார் சகோதரி லூர்துமேரியை சுருக்கமாக லூமே என்று பலரும் அழைப்பார்கள் இவரது வாழ்வில் உடல் உள்ள சுகத்துடன் மேலும் பல ஆண்டுகள் இறை பனி தொடரவும் இறைவன் இவரை நிறைவாக ஆசீர் வத்திக்கவும் வேண்டிப் பிராத்தித்து வாழ்த்துகிறோம்.



## அருட் தந்தை கிறிஸ்ரி யோக்கிம் பிள்ளை அடிகள். 60பது ஆண்டுகள்.

அருட் தந்தை கிறிஸ்ரி யோக்கிம் பிள்ளை அடிகள் இந்த வருடம் மார்கழி மாதம் ஐந்தாம் திகதி அவரது குருத்துவப் பனியில் அறுபதாவது குருத்துவப்பனியின் நிறைவு ஆண்டாகும் தந்தை அவர்கள் நாற்பது வருடங்களுக்கு முன்பே அமெரிக்காவிலும் கனடாவிலும் தொடர்ந்து குருமடங்களில் குருக்களுக்கு படிப்பித்து பல குருக்கள் ஆயர்கள் இவரிடம் படித்துள்ளார்கள் அத்துடன் உலகின் பல பாகங்கள் சென்றும் குருமடங்களில் படிப்பித்தவராகும் மேலும் கனடாவில் தமிழ் மக்கள் ரொறொன்ரோவில் கால் பத்தித்த தொடக்க காலத்தில் இவர்தான் முதலாவது தமிழ் கத்தோலிக்க மக்களின் ரொறொன்ரோ மறை மாவட்ட மறை பனி சப்பிலினாக செயல்பட்டவர் அது மட்டுமல்லாமல் இவர்தான் ரொன்றோ தமிழ் கத்தோலிக்க சங்கத்தையும் ஆரம்பித்தவர். அதைத்தொடர்ந்து தமிழ் பங்கையும் தமிழ் குருக்கள் ரொன்றோ மறை மாவட்டத்திற்கு வருகை தருவதையும் முக்கியமாக உணர்ந்து செயல்பட்டவர். இவரது பிறந்த நாள் தை மாதம் ஆறாம் திகதியாகும். இவர் வாழ்வில் இறைவன் நல்ல சுகத்தையம் உள்ள பலத்தையும் வழங்க வேண்டும் என்று இறைவனை வேண்டி அறுபது ஆண்டுகள் நிறைவை ஒட்டி வாழ்த்துக் கூறுகிறோம்.

# திருவருகைக்கால சரமும் (Advent wreath) திரிகளும் (Candles).

திருவருகைக்கால சரமும் திரிகளும் மிகவும் பழமைவாய்ந்த ஒரு பாரம்பரியமாகும். இதனால் இம்முறை எப்போது ஆரம்பிக்கப் படடது என்று உறுதியாக கூறமுடியாது. கிறித்தவ நாகரீகத்திட்கு முற்பட்ட காலத்தில் யேர்மன் நாடடவர்களால் மிகவும் குளிரும், குறுகிய பகல் நேரமும், இருட்டும்மான டிசம்பர் மாதத்தில், மரங்கள் இலைகளை இழந்த நிலையில் பச்சை நிறமே பார்க்க முடியாத காலங்களில் பச்சை நிறமான சரத்தில் (wreath) மெழுகுவர்த்திகளை (Candles) ஏற்றி தங்கள் வீடுகளில் பயன்படுத்தினார்கள். இதன் மூலமாக நீண்ட வெப்பமான, சூரிய ஒளி கொண்ட நாட்களை எதிர்பார்த்து இருக்கும் ஒரு எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் இது குறித்து நின்றது. நோர்வே, டென்மார்க், போன்ற நாடுகளில் மெழுகுதிரிகளை ஒரு சக்கரத்தில் ஏற்றி இறைவனைப்பார்த்து கால சக்கரத்தை விரைவில் மாற்றி நீண்ட ஒளியைக் கொண்ட நாட்களையும் சூரிய வெப்பத்தையும் தரும்படியாக செபித்தார்கள்.

மத்திய கால பகுதிகளில் கிறிஸ்தவ சமயம் பரப்பப்படட வேளையில் கிறிஸ்தவர்கள் இந்த முறைமையயை தங்களின் ஞான வாழ்க் கைக்கு பயன் படும் வகையில், கிறிஸ்து பிறப்பு விழாவிட்கு ஞான ஆயத்தம் செய்யும் முகமாக இந்த சரத்தையும் மெழுகு திரிகளையும் பயன்படுத்த ஆரம்பித் தார்கள். கிறிஸ்துவே உண்மையான ஒளி பாவத்தினதும் சாவினதும் இருளை அகற்றி உண்மையின் ஒளியை ஏற்ற உலகிற்கு அனுப்பப்படட மானிட மகன் (யோவான் 3 /19 -21) கி.பி 1600ம் ஆண்டுகளில் கத்தோலிக்கர்களும், லூத்தரன் திருச்சபை யினரும் இந்த திருவருகைக்கால மெழுகு திரிகளையும், சரத்தையும் தங்களின் நாளாந்த செபங்களில் பயன் படுத்த ஆரம்பித்தார்கள்.

இந்த சரமும் மெழுகு திரிகளும் நமக்கு அருமையான அர்த்தங்களை குறித்து காண்டுகின்றன; சாரம் பல்வேறு பச்சை நிற இலைகளால் செய்யப்பட்ட்து. இது இலைஉதிர் காலத்தில் தொடச்சியான வாழ்க்கையையும், உயிரையும் குறித்து காட்டு கிறது. இந்த சரத்தில் பயன்படுத்தப்படுகின்ற புன்னைமரம் (Laurel tree ) இதன் இலைகளை பண்டைய ரோமானியர் வெற்றிக்கு அறிகுறியாக சூடுவர். எனவே இந்த இலை கிறித்தவர்களுக்கு துன்பங்கள், வேதனைகளில் இருந்து வெற்றி பெற்றமைக்கான அடையாளமாக திகழ்ந்தது. வேதாரு மரம் (Pine tree ) பசுமையான புதர்செடி (holly ) ஊசி இலை மரம் (Yew ) ஆகியவை முடிவில்லாத வாழ்க்கையையும், வேதாரு மரம் (Cedar ) உறுதியையும், குணமாக்களையும் குறித்து நிட்கின்றது. பசுமையான புதர் செடியில் (holly) உள்ள முட்கள் கிறிஸ்துவின் முள் முடியை நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. ஆரம்பமோ முடிவோ இல்லாத வடடவடிவமான சரம் ( wreath ) இறைவனில் நமக்குள்ள முடிவில்லா வாழ்வையும் , ஆன்மாவின் சாகாத் தன்மையும், கிறிஸ்துவில் நாம் பெறவிருக்கும் முடிவில்லா வாழ்வையும் குறிக்கின்றது. ஆகவே திருவருகைக்கால சரம் ( Advent wreath ) எமது ஆன்மாவின் அழியாத தன்மையும், மனிதனாக பிறந்து தனது பாடுகள், மரணம் ,உயிர்ப்பினால் பாவத்தையும் சாவையும் அழித்த நித்திய வார்த்தையாகிய கிறித்துவில் நாம் காணப்போகும் நித்திய வாழ்வையும் குறித்து காட்டுகின்றது. இந்த சரத்தில் ஏற்றப்படும் நான்கு மெழுகு திரிகள் திருவருகைக்கால நான்கு (4) வாரங்களை பிரதிபலிக்கின்றன. ஒரு புராதன பாரம் பரியப்படி ஒவ்வொரு மெழுகுதிரியும் ஆயிரம் வருடங்களை குறிக்கின்றது என்றும் சொல் வார்கள் ஏனேனில் மெசியா வாக்களிக்கப்படட காலத்தில் இருந்து கிறிஸ்து பிறப்பிட்கு நான்காயிரம் வருடங்கள் எடுத்ததாக அந்த பாரம்பரியம் கூறுகின்றது.

நாம் பயன்படுத்தும் மெழுகு திரிகளில் மூன்று திரிகள் ஊதா (purple) நிறத்திலும் ஒரு திரி இளங்சிவப்பு (Rose or pink ) நிறத்திலும் இருக்கும் ஊதா நிறம் செபம், தவம், தியாகங்கள், ஆயத்தப் படுத்தல், ஆகிய முக்கிய திரு வருகைக்கால பண்புகளையும், திருவருகைக் கால மூன்றாம் ஞாயிற்றுக்கிழமையில் ஏற்றப்படும் இளன்சிவப்பு மெழுகுதிரி கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியையும் குறிக்கின்றது. கிறிஸ்து பிறப்பு விழாவை என்பதை உணர்த்தும்படியாக இந்த திரி ஏற்றப்படும். இவ்வாறு வாரம் வாரம் ஏற்றப்படும் இந்த திரிகள் கிறிஸ்துவின் முதல் வருகையின்போது இருந்த எதிர்பாப்பு, நம்பிக்கை, ஆகிய பண் புகளையும், அதே கிறிஸ்து தனது இரண்டாவது வருகையின் போது வாழ்வோரையும், இறந் தோரையும், நடுத்தீர்க்க வருவார் என்ற எதிர்பார்ப்பையும் எடுத்து காட்டுகின்றது. ஒளி உலகத்தின் ஒளியாகிய கிறித்துவை குறிக் கின்றது. சில நவீன கால திருவருகைக்கால சரத்தின் நடுவில் வெள்ளை திரியை காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த திரி கிறிஸ்துவை பிரதிபலிக்கின்றது. இந்த திரி கிறிஸ்து பிறப்பின் முதல் நாள் அதாவது டிசம்பர் 24 ம் திகதி ஏற்றப்படும்.

இந்த திருவருகைக்கால சரம் ஆலயத்தில் மட்டும் தான் பயன்படுத்த வேண்டும் என்று அல்ல. உண்மையில் இந்த முறை குடும்பக்களில்தான்

முதலில் ஆரம்பிக்கப் படடது. இந்த முறை குடும்பங்களில் நாளாந்த செபத்திட்கு உதவியாக இருக்கவேண்டும். விசேஷமாக இரவு உணவு அருந்தும் நேரங்களில் இந்த திரிகள் ஏற்றப்பட்டு செபித்து, அவையை ஒத்த கலந்துரையாடல்கள் குடும்பத்தில் நிகழ வேண்டும். திருவருகைக் கால முதல் வார திரியை குடும்பத்தின் இளைய பிள்ளையும், இரண்டாவது வார திரியை மூத்த பிள்ளையும்,மூன்றாவது வார இளன்சிவப்பு திரியை தாயும், இறுதியான நான்காவது வார திரியை தந்தையும் ஏற்றுவது மிகவும் பாராட்டப்படக்கூடிய செயலாகும். இவ்வாறு ஒவ்வொரு குடும்பமும் கூடி செபித்து, உரையாடி, கிறிஸ்து பிறப்பிட்கு ஆயத்தம் செய்ய அழைக்கப்படுகின்றார்கள்.

Fr. Francis Jeyaseelan CR, MCL, JCL.

# அன்னை திரேசாவை அடிபணிகின்றோம்.

**எத்தனை தொண்டு நிறுவனங்கள்**

**இந்தியத் திருநாட்டில் இருந்தாலும் சமுதாயத்தின் அடிமட்டத்தில் அடிபட்டுக் கிடப்பவர்களுக்காக அவை பாடுபடட்டதே இல்லை. இப்படிப்பட்ட மக்களுக்காகஉழைத்த பெருமை அன்னை திரேசாவையே சாரும்.சமுதாயத்தாலும் அரசியல் வாதிகளாலும் ஓரங்கட்டப்பட்ட அப்பாவி மக்களுக்கு வாழ்வளிப்பவர்கள் அன்னை திரேசாவும் அவர்தம் உடன் உழைப்பாளர்களுமே”**

**சேவியர் மாம்ப்ரா.சே..ச**

# தலைவர் ஆனார்.

ஆசிரியர் மரிணா அந்தோணிப்பிள்ளை அவர்கள் வவுணியாவில் பதினைந்து வருடங்கள் பாலர் பாடசாலையில் ஆசிரியாராகவும் பனிபுரிந்துகொண்டு புனித அந்தோனியார் ஆலய பாடல்குலாம் தலைவியாகவும் கடையாற்றினார் கனடா வருகை தந்த நாள் முதல் தமிழ் கத்தோலிக்க வெளியீட்டகத்தின் செயலாளராவும் பரம்பொருள் கத்தோலிக்க வானொலி நிகழ்வின் ஒருங்கினைப்பாளராவும். புாடகராகவும். பத்து வருடங்கள் பனிபுரிந்த அவர்கள் இப்போது இறம்பைக்குள மகளீர் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தலைவியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார் ஆகவே எமது வாழ்த்துக்களையும் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம் இவரது பனி பரந்து விரிந்து மக்களுக்கு என்றும் கிடைக்கவும் இறைவன் இவரை நல்ல சுகத்துடன் நீடுழி வாழ்க வாழ்த்துகிறோம்

# கிறிஸ்மஸ் தின விழாக் கொண்டாட்டம்

## பேராசிரியர் இ. பாலசுந்தரம்

உலகில் வாழும் அனைத்து மக்களது பண்டிகைகள், திருநாட்கள், மற்றும் விழாக்கள் பொதுவாகப் பருவ மாற்றங்களின் அடிப்படையிலும், புனிதர்களின் பிறப்பு, இறப்பு என்பவற்றுடனும் அல்லது அறுவடை, புதிர் உண்ணல் முதலான விவசாயப் பண்பாட்டு நிகழ்வுகளுடனும் தொடர்புடையனவாகவே காணப்படுகின்றன. இவ்வகையில் புதுவருடக் கொண்டாட்டம், தைப்பொங்கல், ஆடிப்பெருக்கு, ஹலோவீன், நன்றிகூறும்நாள் முதலான பல்வேறு விழாக்கள் காலம் காலமாக கொண்டாடப்பட்டு வருகின்றன. இத்தகைய கொண்டாட்டங்களில் கிறிஸ்மஸ் விழாவுக்குரிய தோற்றக் காரணிகளாக யேசுகிறிஸ்து நாதரின் புனித பிறப்பு. சூரியமண்டலப் பயணத்தின் திருப்பம் முதலான காரணங்கள் கூறப்படுகின்றன.

கிறிஸ்மஸ் விழா புனிதமான கொண்டாட்டமாகவே தொடக்க காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் காலபோக்கில் இவ்விழா உலகமயமாக்கப்பட்டதோடு, அதன் பின்னணியில் வணிகத்திற்குரிய முக்கிய பிரிவாகவும் வளர்ந்துவிட்டது. யூத இனத்தவர் மத்தியில் அவதரித்த தேவபாலனின் நினைவாக 2000 ஆண்டுகளாக இப்பண்டிகையை மக்கள் சமயரீதியாகவும் சமூகஅடிப்படையிலும் கொண்டாடி வருகின்றனர். இத்தினத்தறிகு ஒரு வாரத்திற்கு முன்பாகவே வீட்டின் உள்ளும் புறமும் அலங்கரித்தல் நடைபெறும். வீட்டின் உள்ளே கிறிஸ்மஸ் மரத்தை மின் விளக்குகளாலும், வர்ணக்கலவைகள் சேர்ந்த கடதாசிகளாலும், இனிப்புப் பண்டங்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் என்வற்றாலும் கிறிஸ்மஸ் மரங்கள் அலங்கரிக்கப்படும். மிகழ்வூட்டும் ஒரு சின்னமாக அம்மரத்தின் அலங்காரத்தை அமைத்துக்கொள்வது வழக்கம். இன்றைய நவீன தொழில்நுட்பத்தின் மின்சக்திப் பாவனையால் விதம் விதமாக நகரம் முழுவதுமே எங்கும் அலங்கரிக்கப்ட்டிருப்பதைக் காணலாம். அத்தினத்தில் முக்கியமாகக் கத்தோலிக்கர் அனைவரும் தத்தம் தேவாலயங்களுக்குச் சென்று அங்கு நிகழும் விசேட ஆராதனைகளில் கலந்து கொள்வதை முதற் கடமையாகவும் பேறாகவும் கொள்வர்.

இக்கொண்டாட்டத்தில் முக்கியமாக உறவினர் ஒன்று சேர்வர், விருந்துபசாரங்கள் மிகவும் பிரமாதமாக நடைபெறும் பரிசுப் பொருட்கள் பரிமாறப்படும். இவ்விழாவில் சாந்தா தாத்தா (Santa Claus) இடம்பெறுதலும் அவர் சிறுவர்களுக்குப் பரிசுப்பொருட்கள், இனிப்புக்கள் வழங்குவதும் மிகவும் மிகிழ்ச்சியூட்டும் செயல்களாகும். அனைத்து மக்களும் இவ்விழாவில் கலந்து கொள்ளும் வகையில் பொதுவாக அனைத்து நாடுகளிலும் அரசாங்க விடுமுறையும் வழங்கப்படுகிறது.

கிறிஸ்மஸ் காலத்தின் காலநிலை பற்றி நோக்கும்போது அனைத்துப் பனிவலய நாடுகளில் பனியும் கடும் குளிரும் இருளும் சேர்ந்து மக்களை மனச் சோர்வடையச் செய்யுமநிலை அமைந்திருத்தல் நோக்கத்தக்கது. அதனாலேயே வீட்டின் அகத்தும் புறத்தும் தீபங்களை ஏற்றி வெளிச்சம் ஏற்படுத்துவதும், உற்றார் உறவினர் சேர்ந்து உண்டு களித்து மகிழ்வதும் காலநிலை

சார்ந்த விழாவாக இது கொண்டாடப்படுவதையும் நோக்கலாம்.

பண்டைய ரோமானிய மக்கள் அறுவடைமுடிந்து செல்வப்பெருக்குடன் மழிச்சியாக இருந்த காலத்தில், தம் விவசாயத் தெய்வம் சனிக்கிரகத்திற்கு (Satrunila) நாடாளாவிய இன்ப விழா நடத்தி, நன்றி கூறும் வகையில் கொண்டாடப்பட்டிருக்கிறது. ரோமான் அரசும் மக்களும் இணைந்து இவ்விழாவைக் கொண்டாடியுள்ளனர். ரோமரில் உயர்வர்க்க மக்கள் சூரியக்கடவுள் மித்திரா குழந்தையாக மலையுச்சிசியில் டிசெம்பர் மாதம் 25இல் பிறந்தார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவ்விழாவைக் கொண்டாடியுள்ளனர்.

கிறிஸ்தவத்தில் 'ஈஸ்ரர் தினம்' மிக முக்கிய புனித தினமாகும். தொடக்க காலத்தில் புனித தேவபாலன் பிறந்த தினம் கொண்டாடபட்படவில்லை. கி.பி. 4ஆம் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவ திருச்சபை தேவபாலனின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதாகத் தீர்மானித்ததாயினும் யேசு பிறந்த தினத்தைப்பற்றிய ஆதாரம் அப்போது அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் போப்பாண்டவர் முதலாவது ஜூலியஸ் என்பரே டிசெம்பர் 25ஆந் திகதியை தேவபாலன் பிறந்த தினமாக உறுதி செய்ததோடு. ரோமானிய மக்கள் தம் Saturnalia கொண்டாட்டத்துடன் இதனை இணைத்துக் கொண்டனர். பின்னர் கி.பி.432இல் எகிப்பதிலும் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்திலும் கிறிஸ்மஸ் விழாக் கொண்டாடப்படுவதாயிற்று. 8ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஸ்காந்திநேவிய நாடுகள் வரையும் இவ்விழா பரவிற்று. காலப்போக்கில் கிறிஸ்மஸ் விழா மேல்தட்டு மக்கள் வறிய குடிமக்களுக்குத் தான் தருமம் செய்யும் விழாவாக மாற்றம் அடைந்துள்ளது எனவும் அறியப்படுகிறது. 17ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவியல் புரட்சியின் காரணமாக கிறிஸ்மஸ் கொண்டாட்ட முறையில் மாற்றம் ஏற்படுவதாயிற்று. ஆயினும் இரண்டாவது சாள்ஸ் மன்னன் காலத்திலேயே கிறிஸ்மஸ் தினம் பொது விடுமுறை நாளாக பிரகனடம் செய்யப்பட்டது. அமெரிக்காவில் ஜூன் 26, 1870 வரை கிறிஸ்மஸ் தினம் அரசாங்க விடுமுறையாகக் கணிக்கப்படவில்லை என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது.

புகழ் பூத்த ஆங்கில எழுத்தாளர் சாள்ஸ் டிக்கன்ஸ் (Charles Dickens) கிறிஸ்மஸ் விடுமுறை தொடர்பாக *A Christmas Carol* என்ற கதையை எழுதி, மனித குலத்திற்கான அறப்பணிகள், நற்சிந்தனைகள் என்பன கிறிஸ்மஸ் விழாவின் அடிப்படையாக அமைய வேண்டும் என்பதை உலகுக்கு அறிவித்தார். அதனைத் தொடர்ந்து உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்களும் மற்றையோரும் இத்தினத்தை மிக விமரிசையாகக் கொண்யாடி வருகின்றனர். இவ்விழாவில் முக்கியமாகக் கிறிஸ்மஸ் மரம் நட்டு, அதில் அலங்காரம் செய்தல் எங்கும் பொது நிகழ்வாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் அமெரிக்காவில் மட்டும் 30 -35 மில்லியன் கிறிஸ்மஸ் மரம் விற்கப்படுகின்றன எனவும், இம்மரங்களை நட்டு விற்பனை செய்வதற்கென்றே அங்கு 21,000 பேர் ஈடுபட்டுள்ளனர் என்றும் ஓர் இணையத்தளம் குறிப்பிடுகிறது. 1900 ஆண்டளவில் பிளாஸ்டிக் மரங்கள், பிளாஸ்டிக் பொருட்கள் என்பன அலங்காரப் பொருட்கள் அறிமுகமாயின. இப்போது இயற்கையான கிறிஸ்மஸ் மரம் வீட்டினுள் நடப்படுமபோது, எளிதில் அவற்றில் தீப்பிடிக்கும் ஆபத்து உடையது என்பதால் பிளாஸ்ரிக் கிறிஸ்மஸ் மரங்ககளே பயன்பாட்டிலுள்ளன. குறிப்பாகத் தொடர்மாடிக் கட்டிடங்களில் இயற்கையான கிறிஸ்மஸ் மரங்கள் நடுவது சட்டரீதியாக விலக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தாக்கது.

கிறிஸ்தவர்கள் விருந்தினரை அன்புடன் வரவேற்கும் தன்மையை வெளிப்படுத்தும் நோக்கமாக தம் வீட்டுக் கதவுகளில் பிளாஸ்ரிக் மலர் வளையங்களை தொங்க விட்டிருப்பதும் வழக்கமாக உள்ளது.

வாசகர் அனைவருக்கும் கிறிஸ்மஸ் நத்தார் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

## கத்தோலிக்க திருச்சபையின் விதி முறைகளும் (Precepts) வாழ்க்கையும்.

கிறிஸ்தவ விசுவாசிகள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் ஒவ்வொருவரும் தங்களுடைய விசுவாசத்தையும், கிறிஸ்துவின் மேல் கொண்ட அன்பையும் வெளிப்படையாக அறிக்கையிட அழைக்கப்படுகின்றார்கள். இவ்வாறு வெளிப்படையாக அறிக்கையிடுவதட்கு உதவியாக பத்து கடடளைகளும் மற்றும் இக்கடடளைகளுக்கு மெருகூட்டும்படியாக திருச்சபையின் விதிமுறைகள் (precepts) அமைகின்றன. இன்றைய நவ நாகரிக நுகர்வோர் சமுதாயத்தில் நாம் இந்த விதிமுறைகளை மறந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இவற்றை மீண்டும் ஞாபகமூட்டும் விதமாக அவைகளை இங்கே தருகின்றேன்:

1 ஞாயிறு கடன் திருநாட்களில் முழுத்திருப்பலி காண்பாயாக!

2 உபவாச மாமிச தவிர்ப்பு நாட்களை அனுசரிப்பாயாக!

3 குறைந்தது வருடத்திட்கு ஒரு தடவையாவது நல்ல பாவசங்கீத்தனம் செய்வாயாக !

4 பாஸ்கு காலத்தில் நற்கருணை பெறுவாயாக!

5 திருச்சபைக்கும், ஞான மேய்ப்பர்களுக்கும் உன்னாலான உதவி செய்வாயாக!

6 குறைந்த வயதிலும்,நெருங்கிய உறவுமுறையாரோடும் திருமணம் செய்யாதிருப்பாயாக!

இந்த திருச்சபையின் விதிமுறைகளின் படி ஒவ்வொரு கத்தோலிக்கரும் வாழ்வதட்கு அழைக்கப்பட்டிருக்கின்றார். விஷேசமாக ஞாயிறு திருப்பலியில் பங்குபற்றுவது இன்றி அமையாத ஒன்று. ஞாயிறு திருப்பலிக்கு சமமாக எதுவும் ஈடுசெய்ய முடியாது. பத்து கடடளைகளில் மூன்றாவது கடடளை ஆண்டவரின் நாட்களை பரிசுத்தமாய் அனுசரிக்க மறவாதிருப்பாயாக என்பதாம். ஞாயிறு தின திருப்பலியில் பங்குபற்றுவதின் மூலம் தான் நாம் இந்த கடடளையை நிறைவேற்றுகின்றோம்.

ஞாயிறு தினங்களில் திருப்பலியில் பங்குபற்றி யதட்கு பிறகுதான் மற்றைய வேதாகம வாசிப்பு வகுப்புகளிலோ, செபங்களிலோ ஈடுபடவேணும். வேதாகம வாசிப்பும், வகுப்புகளும், திருப்பலிக்கு பதிலாக அமையக்கூடாது. இது தவறு பாவமான செயல். ஞாயிறு திருப்பலி தவறுவது சாவான பாவம். ஒருவர் கத்தோலிக்கராக வாழவேண்டும் எனில் அவர் திருமுழுக்கின் வழியாக கிறிஸ்துவில் ஒருடலாக இணைக்கப்படடவர்கள் என்பதால், இறைமக்களாக, உருவாக்கப்பட்டுள்ளவர்கள் கிறிஸ்துவின் விசுவாசிகள் ஆவர். இக்காரணத் தினால் அவர்கள் தங்களுக்குரிய முறையில் கிறிஸ்துவின் குருத்துவ, இறைவாக்கு, மற்றும் ஆளுகைப்பணிகளில் பங்கப்பற்றுள்ளதால், இறைவன் இவ்வுலகில் செயல்படுத்த திருச்சபை யிடம் ஒப்படைத்துள்ள பணியைத் தத்தமக்குரிய வாழ்க்கை நிலைக்கு கேட்ப நிறைவேற்ற அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வுலகில் ஒரு சமூகமாக நிறுவப்பெற்றதும் ஒழுங்கு முறையில் அமைந்ததுமான இத்திருச் சபை பேதுருவின் வெளிவருப வராலும், அவரோடு ஒன்றித்திருக்கும் ஆயர்களாலும் ஆளப்படும் கத்தோலிக்க திருச்சபையில் நிறைவாக உள்ளது ( திருச்சபை சடடம்: 204 ). திருமுழுக்கு பெற்று, விசுவாச அறிக்கை, அருளடையாளங்கள், மற்றும் திருச்சபையின் ஆளுகை என்ற பிணைப்புகளால் திருச்சபை யில் காணக்கூடிய அமைப்பில் கிறிஸ்துவோடு இணைந்திருப்போர், இவ்வுலகில் கத்தோலிக்க திருச்சபையோடு முழுமையான உறவு ஒன்றிப்பில் உள்ளனர் ( திருச்சபை சடடம் : 205 ). எனவே ஒருவர் கத்தோலிக்க திருச்சபையில் முழுமையான உறவு ஒன்றிப்பில் இருக்கிறார் என்றால் நான்கு (4 ) முக்கிய பண்புகள் தேவை. அவையாவன;

1 திருமுழுக்கு

2 விசுவாச அறிக்கை

3 அருட்சாதனங்கள்

4 திருச்சபையின் ஆளுகை

இவற்றில் ஒன்று இல்லை என்றாலும் அவர் கத்தோலிக்க திருச்சபையோடு முழுமையான உறவு ஒன்றிப்பில் இல்லை.

இன்றைய சில புலம்பெயர் வாழ் கத்தோலிக்க மக்கள் மத்தியில் இத்தகையான குண இயல்புகள் மாறி இருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த மக்கள் திருப்பலிகளில் பங்குபெற்றாமல், நற்கருணை பெறாமல், பாவசங்கீத்தனம், திரு மணம் ஆகிய அருட்சாதனங்களை பெற்றுக் கொள்ளாமல், திருச்சபையின் பணியாளர்களின் ஆளுகைக்கு உட்படாமல் தாங்கள் நினைத்த மாதிரி, வீட்டுக்கொண்டும், வீதிக்கொண்டும், சபைகளை தொடங்கிக்கொண்டும், அரசாங் கத்தில் இலாபம் அற்ற தொண்டு நிறுவனம் என்று பதிவு செய்து விட்டு தங்கள் விசுவாச வாழ்க்கையை வியாபாரமாக மாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இவ்வாறு வாழ்பவர்கள், கிறிஸ் துவின் ஒரே திருச்சபையாகிய கத்தோலிக்க திருச்சபையின் முழுமையான உறவு ஒன்றிப்பில் இருந்து விலகி வாழ்கின்றார்கள். குடும்பமாக, குழுவாக சேர்ந்து செபிப்பது, வேதாகமம் வாசிப் பது மிக அவசியமான ஒன்று . தாய் திருச்சபை இப்படியான கிறிஸ்தவ வாழ்வை எப்போதும் ஊக்கப்படுத்துகின்றாள். ஆனால் இத்தகைய வேதாகம படிப்புகளும் செபங்களும் திருப்பலி, அருட்சசாதனங்களில் இருந்து வெளிப்பட வேண் டுமே தவிர அவைற்றில் இருந்து விலக்கப்பட்டு தன்னிச்சையாக அல்ல . வேதாகம படிப்புக்களும், செபங்களும் எந்த விதத்திலும். திருப்பலியையும், திருவருட்சாதனங்களையும் ஈடு செய்ய முடியாது. திருச்சபையின் ஆளுகைக்கு உட்படாமல் " கத்தோலிக்கம் " என்ற பதத்தை பயன் படுத்துவது சடடவிரோதமான செயலாகும் (திருச்சபை சடடம் 803/2 ).

ஆகவே அன்பான மக்களே! கிறிஸ்துவின் வழிகளை பின்பற்றுவோம். எண்கள் சொந்த

விருப்பு, வெறுப்பு, சொகுசுகளுக்காக கிறிஸ்துவின் உண்மையான விசுவாசத்தையும், அன்பையும்,திருச்சபையையும் வியாபார பொருளாகவோ அல்லது இலாபம் ஈட்டுகின்ற ஒரு கருவியாகவோ, பயன் படுத்துவதை நிறுத்தி மனம் மாறுவோமாக. தாழ்ச்சியோடும் , கீழ்ப்படிதலோடும், திருச்சபைத் தாயின் குரலுக்கு செவிமடுப்போமாக. “ஆண்டவருக்கு மகிழ்ச்சி தருவது எரி பலிகள் பிற பலிகள் வெலுத்துவதா? அவரது குரலுக்கு கீழ்ப்படிவதா? கீழ்படிதல் பலியைவிடச் சிறந்தது. கீழ்படிதல் ஆட்டுக் கிடாய்களின் கொழுப்பை விட மேலானது” (1சாமுவேல் 15/22) என்ற ஆண்டவரின் குரலுக்கு செவிசாய்ப்போமாக.

பெயரில்அல்லசெயலிலும்,வார்த்தையிலும்,உண்மையான,கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களாக வாழ்வோம். கிறிஸ்துவினால் இஸ்தாபிக்கப்படட ஒரே திருச்சபையை சேர்ந்த கிறிஸ்துவின் உண்மையான பிள்ளைகளாக வாழ்வோம். மனிதர்களினால் தங்கள் சொந்த இலாபங்களுக்காக சிறிய, சிறிய,சடடவிரோத சபைகளாக செயல் படும் போலி கிறிஸ்தவ சபைகளை இனம் கண்டு அவர்களை பின்பற்றாமல் இருப்போமாக. அவர்கள் தங்களுடைய அறியாமையில் இருந்தும், அகங்காரத்திலிருந்தும் விடுபட அவர்களுக்காக செபிப்போமாக' கத்தோ லிக்கம்" என்ற பதம் முறைப்படி உபயோகப்படுத்த படுகின்றதா என அறிந்து உண்மைக்கு சான்று பகர்வோமாக. கிறிஸ்துவை அன்பு செய்வோம். கிறிஸ்துவினால் இஸ்தாபிக்கப்பட்டு புனித பேதுருவின் வழிவருபவரால் வழிநடத்தப்படும் ஒரே, பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்த் தோலிக்க த்ரிருச்சபையை அன்பு செய்வோமாக. இத்திருச்சபைக்கு எதிராக செயல்படும் எல்லா தீயசக்திகளையும் எதிர்த்து வெற்றி கொள்வோமாக.

Fr. Francis Jeyaseelan CR, MCL, JCL.

# 3rd Sunday in Advent December 11, 2016

Isaiah 35:1-6a, 10; Psalm 146; James 5:7-10; Matthew 11:2-11

Isaiah seems to be back to his old theme again
- the blind will see
- the deaf will hear
- the lame with leap like a deer.

You almost expect that whenever, Isaiah speaks of the advent of the Anointed One, the advent of the Promised One, you will hear something about HEALING. The Christmas Carol, Hark the Heralds tells us that Jesus will come “risen with healing in his wings. The advent of Jesus is accompanied with proclaiming the Good news followed by the healing of those who need it.

”The message is one of hope for God’s people who seem to suffer one defeat after another. When the enemy defeats them, there is destruction and the land looks like a desert. The “desert” seems to be an icon or symbol of depression and broken-hearts of the People of Israel. But once again God takes charge: the wilderness with bloom with bright flowers. Lebanon will once again, glory in its famous cedars.

For us in 2016, the joy and the singing of the Christmas feast seems to overflow(?) or flow backwards into the expectant season of Advent. The promise of the advent of the Lord is now a reality, even though Christmas is two weeks away. We are to appropriate these graces which are given as a gift. There are no ubiquitous “shipping and handling charges.” However, we have to make an effort and claim these graces. These are joy and gladness, freedom and healing.

The reality is that in our midst there are still some who are in captivity like the people of Israel. In those days, the Babylonians captured them and took them as slaves. Today there are some of us who are sad in spirit, enslaved by difficulties and pressures of life. Some of these a physical issues: car accidents, diagnosis with cancer or dementia, an aging parent who insists on staying alone, the death of a loved one. All these can make it pretty difficult to get into “leaping like a deer” or singing for joy.

The apostle James tells those of us who are in such a frame of mind, to be patient. Deliverance is definitely

there. Unfortunately we are an impatient people. We want a cure, we want deliverance and we want it right away or at least by tomorrow. We have been affected by the virus of impatience. It is difficult to understand why an all powerful God should delay. However, it could be that the Lord is fashioning himself a people. The trip from Egypt to Israel is only a week or more by caravan. But the People of Israel took 40 long years. God was fashioning for himself a People. They would be a chosen race, a royal priesthood, a holy nation. But few of the people who left Egypt, actually reached the Promised Land. Most died on the way. Those who were born on the journey, would lead the People onto the Promised Land. They required a great deal of patience – as St. James tells us today.

The Gospel finds John the Baptist in prison thanks to Herodias the unlawful wife of Herod. He has been in a damp and dark prison. It would be easy to have doubts of his mission and the work he had already done. In the Canticle, his father Zechariah had said that
"John – would be called the Prophet of the Most High
(you) will go before the Lord, to prepare his ways,
to give people knowledge of salvation
through the forgiveness of sins."

John had done all this, but was Jesus really the Messiah? Jesus was not condemning sins it seemed, in fact the news was that Jesus was forgiving sins, Jesus was sitting down and eating with Tax Collectors and Sinners. Jesus was a good man, but perhaps John had doubts about affirming that Jesus was the Messiah. So John as usual is straightforward. He will not beat about the bush. He will send his disciples and ask Jesus face-to-face: Are you the Messiah or not? John himself had been asked that question about himself. He knew he was not the Messiah, but just one who would point him to the crowds.

Jesus does not answer John. Jesus does not answer us directly. We have been given a brain to sort things out and a free will to make a choice. Jesus tells John what was spoken by the Prophets, especially the prophet Isaiah, about the Messiah. The Blind will see, the Deaf will hear and the Poor will have the good news proclaimed to them. If you John think that these are the works of the Messiah, and if you see that I have done these works, you draw your own conclusion. John is not doubting like his father doubted the Angel Gabriel. Rather he is asking in the same way as Mary asked the Angel Gabriel. How are we to reconcile "Jesus at his last coming to separate the Good from the Bad" and Jesus the Compassionate Shepherd who will go after the lost sheep?

The message from the Third Sunday of Advent is one of great hope that bubbles up in joy. May this same joy fill out hearts.

**Story: patience**
After betraying Jesus, Judas found himself in pitch-black darkness at the bottom of an endlessly deep pit. After weeping for a thousand years in sorrow for his sinful betrayal, and now empty of tears, he looked up to see a tiny speck of light way up at the top of the pit. After hundreds of years of contemplating that tiny glimmering glow, he attempted to climb up toward the light. For many more years he struggled to scale the slimy, slippery walls of that pit, only to lose his grip and come slithering down to the bottom.

Finally, after several more lengthy attempts, he was able to crawl inch-by-inch all the way up to the rim at the top. Climbing out of the dark pit, he found to his surprise that he was in a luminously brilliant room where twelve men were seated at a long table. "We've been waiting for you, friend Judas," said Jesus, who was seated at the far end. "We couldn't begin until you came."

## 4th Sunday of Advent
## December 18, 2016

(Year A) Isaiah 7:10-14; Psalm 24; Romans 1:1-7; Matthew 1:18-24

When our situation is desperate and we are backed into a corner, we want to be sure that God is present and has our back. What do we ask of God for reassurance or proof? The answer for many people, even religious ones, is 'a lot.' In the 8th century BC, king Ahaz of Jerusalem was terrified. Jerusalem was besieged by enemies. He didn't know how long he could hold out, and he was contemplating either surrender or a military alliance with another power. Speaking on God's behalf, Isaiah instructed Ahaz that he was to do nothing of the sort. Trust God; all will be well. Ahaz was probably doubtful, but Isaiah gave him an absolute blank check: ask for any sign you want, as high as the heavens or as deep as Sheol. Ahaz timidly refused the offer, on the rather flimsy excuse that he didn't want to put God to the test. Isaiah was not to be put off – he

informed Ahaz that he was going to get a sign anyway. A young woman was going to conceive and bear a child, and it would be named Emmanuel – God is with us. The name was intended to be a comforting and hope-giving sign, assuring Ahaz and the people that God had not forgotten or abandoned them. This was clearly a sign intended for the lifetime of Ahaz – in fact, in the very near future. At this point in history, it was not a prophecy of any great messianic event in the distant future. The crisis passed, and Jerusalem was spared – for the time being. Driven by fear, doubt, and impatience, we are often tempted to take matters into our own hands. We frequently make a mess of the situation, for fear is not a reliable guide. A time of crisis is a call to center ourselves and focus within, listening to the still, quiet voice of God. When we respond to challenges with faith, patience, and love, things usually sort themselves out. Even if they don't, we will have the courage and the tools to weather the storm. When we make God the last resort rather than the first, we are in for a rough ride. We can take comfort from the psalm: "The Lord is the King of Glory," and this King has promised to journey with us.
Paul focuses on faith as the lifeline that binds us to God. Paul's graced call cast the net far and wide, bringing all to God, even the Gentiles, through faith in the Risen Christ. Throughout the Scriptures, countless individuals – such as Ahaz – were commanded to have faith and trust in God. This faith would be their support and shield. It is a hard lesson to learn, because when the going gets rough, our faith and trust are sometimes the first victims. Faith is not doctrine; faith is absolute trust in God and a willingness to put oneself completely in God's hands. As so many of the familiar supports and certainties in our world crumble or disappear, we are called upon more and more to be people of deep and abiding faith. No power on earth can take our faith from us.
Joseph faced a crisis that required he show the same deep faith and trust. Having discovered that his betrothed was with child, we can only imagine his own inner turmoil. He prepared to put the whole situation behind him and move on with his life, but then came the visitation in the dream. The angel of the Lord reassured him, informing him that the child was conceived by means of the Holy Spirit. There was no further explanation given, and none asked, but the angel did reveal that the child would save the people from their sins. Matthew and his community gave second life to Isaiah's prophecy. Most humans would have demanded explanations and confirming signs. The angel was asking a lot – far too much for most people. But Joseph was a man of true faith – he awoke and did exactly as the angel had ordered. God's work is accomplished through faith-filled men and women that are willing to do what is asked by God without doubts or attempting to control things. Perhaps we could be one of them – no telling what God might accomplish through us.

# Religion in G.W.A.P.E Reflection

Write a journal in which you discuss how religion is part of your life. Would you exclude some because they practised a different religion then you? What is the difference between a Catholic and a Protestant? How does learning about other religion change Griet's perspective?

Religion is a part of my life because my family and I believe that there is a God who created this world in terms of the holy bible. However, I would not exclude other religions because I also believe that people have different opinions in what they believe in because of their experiences. For example, I grew up with two parents that think very highly of the pope and pray for saints. However, other religions like Protestants believe that there isn't a human who is as great as Jesus and only he heads up the church. Protestants and Catholics are very similar but they also have differences that set themselves apart. For example, Griet is a protestant that has never seen a picture of a man hanging on a cross with thorns in his head and becomes frighten with the painting that is set up in front of her at night. Catholics may see this painting as another picture they see on a daily basis and are not very concerned about it. For example, I often see crucifixion crosses on a daily basis because my mom hangs a cross on her wall and statues of that cross hang in every one of my classes in school but I never take second glances at them. To me it is a picture that represents faith in a way that Jesus sacrificed his life to save our sins. However, it is not

just a picture to Griet because she has never seen a painting or picture of the crucifixion scene in her life. This scares her because in her perspective she sees a bloody man who is getting tortured to death with thorns cutting through his head. If she had knowledge of what the crucifixion painting meant, she would have a different perspective and opinion on the painting. So to speak, learning about other religions changes Griet's perspective by finding different meanings and values in the paintings that Vermeer draws. In the same way, Vermeer explains how different religions will have different perspectives of candles. He says that candles to Protestants will be a protestant candle and a catholic would say a candle is a Catholic candle. Although it really is just a candle and it is what you believe that changes your perspective on what you really see. In conclusion, opinions vary on what you've experienced and experiences vary on what you believed in for that period of time. **Valhanee David.**

## மானிடத்தின் மகத்துவம் மழலயாம் மாபரன்

கரு முகிலதன் கண்ணீர் துளியது மண்ணை முத்தமிட காரிருளின் நடு சாமத்தில் கடுங்குளிர் வாட்ட கன்னியவள் கருத்தாங்கிய கல்வாரி மைந்தனின் பிறப்பு மந்தைகளின் மடுவமதில் விந்தையாய் நிகழ்ந்தது. பாவிகள் எம் பாவங்கள்தனை கழுவ பாவத்தின் கழுவாயாய் பாமரன் பிறந்திட்ட பிறப்பு மந்தைகளின் மடுவமதில் விந்தையாய் நிகழ்ந்தது. ஏழைகள் ஏக்கம் தீர்க்க எளியவர் துயரம் போக்க ஏழ்மையின் வடிவம் தாங்கிய ஏற்றமற்ற கல்வாரி மகனின் பிறப்பு மந்தைகளின் மடுவமதில் விந்தையாய் நிகழ்ந்தது. இவ்வுலகதன் இருளகற்றி மனித மனம் தனில் ஒளி ஏற்றி விசுவாசத்தில் உரம்பெற்றிட மனிதம் எனும் புனிதம் காக்க மண்ணிலே ஒளியான மாபரன் பிறப்பு மந்தைகளின் மடுவமதில் விந்தையாய் நிகழ்ந்தது. *தமிழ்மொழி*

## அன்னையின் செபத்தின் வல்லமை

இது ஒரு உண்மைக் கதை

இயேசு பிறப்பின் பொக்கிசம் அன்னை மரியாள். வார்த்தையானவர் மாமிசமாகி அன்னையின் உதரத்துள் பத்து மாதங்கள் துள்ளிக் குதித்து விளையாடுகின்றார். அக் குழந்தையை இறைவன் வார்த்தைப் படி மக்களின் மீட்புக்காக, அர்பணம் செய்கின்றார். அந்த அன்புக் குழந்தை வாழ்ந்த வீடு எமக்கு ஒரு அழியாத நினைவுச் சின்னம்.

அந்தத் தாய் எமது துன்பங்களைத் தன் மைந்தனிடம் பரிந்துரைக்கின்றாள். நன்மைகள் கிடைக்கப் பெற்ற நாமும் அன்னைக்குப் பற்பல காரணப் பெயர்களிட்டு போற்றிப் புகழிகின்றோம்.

அந்தத் தாயின் அருள் மூதூரில் வாழ்ந்த எனது தந்தை பண்டிதர் சவரிமுத்துவிற்கும் கிடைத்தது. எனது தந்தை ஒரு இளைபபாறிய அதிபர். அவர் ஒரு விபத்துக்கள்ளாகி அவரது காலில் பாதிப்பு ஏற்பட்டது. அவ் வேளையில் கூட பஸ் சாரதியின் தவறை, அவருக்கு வேலை போய் விடக் கூடாதே என்பதற்காகத் தன் தவறாக ஏற்றுக் கொண்டார். ஏனெனில் அவருக்கு அதிக குழந்தைகள் இருப்பதை எனது தந்தை நன்கறிவார். காலப் போக்கில் அவரால் எழுந்து நடக்க முடியவில்லை. எட்டு வருடங்களாக அவரைத் தூக்கியே இடங்களை மாற்றுவோம். நடக்க முடியாதே தவிர மற்றப்படி மிகவும் கலகலப்பாகவே இருந்தார்.

காலை, மாலை வானொலி கேட்டு ஊர் உலகில் நடப்பவற்றை அறிந்து கொள்வார். அவரைச் சந்திக்கப் பல அறிஞர்கள் எழுத்தாளர்கள் உறவினர்கள் அடிக்கடி வருவார்கள். மாலை நேரத்தில் இலக்கண இலக்கியம் படிப்பதற்காக மாணவர்கள் வருவார்கள். அவர்களோடு இன்புற்று இலக்கியத்தின் உள்ளே அவர்களோ நுளைந்து விடுவார்.

காலையில் செபமாலை சொல்லிச், சகல ஆத்துமாக்களுக்காகவும் மன்றாடித் தியானம் செய்வார். பின்னர் சிறிது உரக்க ஒரு செபம் சொல்லுவார். வீரமா முனிவர் எழுதிய சத்துரு சங்கார மாலை என்னும் பதிப்பில் இருந்து ஒரு அழகான செபம். வார்த்தைக்கு வார்த்தை புல்லரிக்க வைக்கும் உணர்வுகள். அதனுள் உள் புரையோடிக் கிடக்கும் சரித்திரங்கள்,.... அப்பப்பா!... அந்தச் செபத்தை உணர்வு பூர்வமாகச் செபித்துப் பார்த்தால் நீங்களே உணர்ந்து கொள்வீர்கள். எனது தந்தை அச்செபத்தை உரத்துச் சொல்வதால் மக்கள் பேரப் பிள்ளைகளென எல்லோருக்கும் மனப்பபடமாகி விட்டது.

இச் செபம் பற்றி எனது தந்தையிடம் அளவளாவிய போது, அவர் எங்களிடம் கூறினார் "நான் மரணிக்கும் போது நீங்கள் எல்லோரும் என்னைச் சுற்றி நிற்பீர்கள்"என்று. எனது தந்நை கேலிப் பேச்சில் வல்லவர். எனவே இதையும் கேட்டுச் சிரித்துவிட்டுச் சென்று விட்டோம்.

நான் வெளி நாட்டில் இருந்தேன். அடிக்கடி அப்பாவுக்குச் சுகமில்லை என்று கடிதங்கள் வரும். ஆனால் அன்று வந்த கடிதத்தில் "எதற்றும் ஒரு முறை நீ வந்து அப்பாவைப் பார்த்து விட்டுப் போ" என்று குறிப்பிட்டிருந்தார்கள். உடனேயே நான் விரைவாக எனது பயண ஏற்பாடுகளைச் செய்தேன்.

மார்கழி மாதம் இருபத்தி நான்காம் திகதி வீட்டிற்கு வந்தேன். தந்தையார் எனது தலையைத் தடவி முத்தமிட்டு என்னோடு கதைத்தார். நான் கொடுத்த பொருட்களை அன்புடன் வாங்கிக் கொண்டார். நத்தார் பெருநாளை விமரிசையாகக் கொண்டாடினோம். வருடப் பிறப்பும் வந்தது. முதன் முதலில் தோத்திரம் சொல்லி விட்டு அம்மா, அப்பாவுக்கு வெறிலையுள் மடித்து சுாசு கொடுத்திடுவா. அதன் பின் அப்பா வழமை போல் எல்லோருக்கம் கை விசளம் கொடுப்பார். அன்று நான் அவருக்குத் தோத்திரம் செய்த போது எனது கைகளைப் பற்றியவாறே அம்மா மடித்துக் கொடுத்த வெற்றிலையை வாங்காமல் தயைணைக்குக் கீழே தடவி எனது அம்மா அவருக்குக் கொடுத்த கைவிசளத்தை என் கைக்குள் திணித்தார். நானும் எனது தாயாரும் செய்வதறியாது திகைத்து நிள்றோம்.

மறுநாள் எனது திருமண ஏற்பாடுகள் நடை பெறுகின்றன. தை மாதம் பன்னிஇரண்டாம் திகதி எனக்கு மிக எழிமையான முறையில் குறிப்பிட்ட சில உறவினர்களுடன் கோயிலில் மாலை மாற்றிக் கைப் பிடித்து திரு. ஞானப்பிரகாசம் அவர்களுடன் புனித அந்தோனியார் கோயிலில் திருமண ஒப்கந்தம் நடை பெற்றது.

சில நாட்களின் பின் நாங்கள் யாழ்பாணம் சென்றோம். மாசி மாதம் இரண்டாந் திகதி காணிக்கை மாதாவின் பெருநாள் என்பதால் எனது கணவரின் அக்கா புஸ்பராணி சாள்ஸ் குடும்பத்தினருடன் முதலாந் திகதி மாலை காணிக்கைமாதா கோயில் சுறிறுப்பிரகாரத்தில் கலந்து கொண்டோம். அவ் வேளை எதேச்சையாக எனது மைத்துணி ஜெசிந்தாவைக் கண்டேன். அவர் மூலம் எனது தந்தைக்கு வருத்தம் கடுமையென்பதை அறிந்தேன். அன்று இரவே நாவாந்துறைக் கன்னியர் மடத்தில் இருந்த எனத தங்கை சங்கைக்குரிய சகோதரி சுகிர்தாவிடமும் விபரம் சொல்லிவிட்டு, மறுநாள் அதிகாலை பஸ்சில் புறப்பட்டு வீட்டிற்குச் சென்றோம்.

எனது அப்பாவிற்கு ஒரு அரியசக்கி இருந்தது. நாங்கள் தொட்டால், தொடுகை மூலம் யாரெனப் பெயர் சொல்லி அழைப்பார். அத்துடன் பிற மனிதர்கள் யாரேனும் வீட்டிற்று வந்தால், யார் வந்திருக்கின்றார்கள்? என்று கேட்பார். எனவே நாங்கள் வந்து அவரைத் தொட்டதும் எங்களை அடையாளம் கண்டு கொண்டார். "நீயும் வந்தனீயா?"என்று தங்கை சுகிர்தாவிடம் கேட்டார். கண்கள் மூடியிருந்தன. அவரது வாயில் "செபமாலை மாதாவே!" என்ற உச்சரிப்பு இடைவிடாது ஒலித்துக் கொண்டே இருந்தது.

அப்பாவுக்குச் சுகமில்லை என்பதால் வயல் அறுவடையை ஆரம்பித்து விட்டார்கள். எனவே நானும் எனது கணவரும் வயலுக்குச் சென்று விட்டோம். இரவிரவாகச் சூடடித்து நெற்களைக் களஞ்சியப் படுத்துவதற்காக மூட்டைகளில் கட்டி வீட்டிற்கு அனுப்பி வைத்தோம்.

மறு நாள் மாசி மாதம் ஐந்தாம் திகதி. அடுத்த வயல் அறுவடையும் ஆரம்பமானது. நானும் எனது கணவரும் வயலுக்குச் சென்று விட்டோம். மதியம் வர வேண்டிய உணவுப் பொட்டலங்கள் வரவில்லை. பதிலாக எனது சின்னம்மாவின் மருமகன் டேவிற் இரு சக்கர வண்டியில் வந்திறங்கினார். சாப்பாடு கடையில் இருந்து காரில் வருவதாகக் கூறினார்.. சிறிது நேரத்தில் டேவிற் வந்த வண்டியில் என்னை எனது கணவர் ஏற்றிக் கொண்டு "ஒரு அவசரமான வேலையாம் வா போய்ற்றுக் கெதியாய் வந்திடலாம்" என என்னை அழைத்துக் கொண்டு வீட்டிற்று வந்தார்.

வீட்டிலே எனது மூத்த சகோதரியும், கணவரும், மாமாவும் நின்றார்கள். "தாங்கள் இருந்தாற் போல் திடீரென மூதூருக்குப் போய் வருவோம் என்று வந்தார்களாம்" என்றார்கள். இதற்கிடையில் எனது சகோதரி சுகிர்தா குருவானவரை அழைத்து வந்து நோயில் பூசுதல் சடங்குகளைச் செய்து முடித்தார். எனது சின்னக்கா சின்னத்தான் யாருமே வேலைக்குப் போகவில்லை. எல்லோரும் அம்மாவுக்குத் துணையாக இருந்தார்கள்.

இவ்வேளை திருமலையில் இருந்து பெரியக்காவின் குழந்தைகள் திடீரென வந்திறங்கினார்கள். "யாரோ தொலை பேசியில் ஐயா இறந்து விட்டதாகவும், அங்குள்ள உறவினருக்கு மரணச் செய்தியை அறிவித்து விட்டு உடனேயே புறப்பட்டு வரும்படி அப்பா தெரிவித்ததாகக் கூறினார்களாம்" என்றார்கள்.

எனது தந்தை மரணிப்பதற்கு முன்பே அப்படியொரு செய்தி போய் பேரப் பிள்ளைகள் அவர் முன் வந்து நின்றார்கள். ஆனால் அப்படியொரு செய்தியை யாருமே அறிவிக்கவில்லை. அப்படி அவர்கள் அந்த நேரத்தில் வந்திருக்காவிடில், மறு நாள்தான் மூதூருக்கு வந்திருப்பார்கள். அந்தத் தொலைபேசி அழைப்ப யார் மூலம் போனது என்பது இன்னும் எங்களுக்குப் புரியாத புதிராகவே இருக்கின்றது.

வெருகல் கோயிலுக்குச் சென்று விட்டு வந்த சின்னத்தானின் பெரியம்மா திருமலைக்குச் செல்லாமல் எனது தந்தையின் அருகிலேயே அமர்ந்து விட்டார். திருமணித்தியாலம் வாசிக்கின்றார்கள் "செபமாலை மாதாவே!" என்று ஓயாது சொல்லி வந்த வாய் ஓய்வடைகின்றது. பெரியம்மா கைகளை கூப்பிப் பிடிக்கின்றர் கூடியிருந்த மக்கள் பேரர் உற்றார் உறவினர் எல்லோரும் ஒரே குரலாய் ஒன்று கூடி " இயேசு, மரி, சூசை சவரிமுத்துவின் ஆத்துமத்தை உங்கள் கரங்களில் ஒப்புக் கொடுக்கின்றோம்" என்று மூன்று முறை அழுகையோடு ஆர்பரிக்கின்றார்கள்.

எனது தந்தை சொன்ன வார்த்தை பலித்தது. வயல்களில் அமோக விளைச்சல். வீட்டில் இருந்த பப்பாசி, கொய்யா மரங்கள் எல்லாம் வழமையை விட அதிகமாகவே கனிகளைந் தந்தன. எங்கெங்கோ சிதறிக் கிடந்த நாங்கள் அனைவரும் மாதாவின் வல்லமையால் ஒன்று கூடினோம். வேளிநாட்டில் இருந்து நான் வந்ததும் செய்திகளின் பரிமாற்றங்களும் அந்த அன்னையின் அருட் பார்வையே. இங்கு நான் எனது தந்தை விட்டுச் சென்ற அந்தச் செபத்தினை உங்களுக்காகத் தருகின்றேன்.

மேரி ஞானபிரகாசம்

## இரண்டு தமிழ் கத்தோலிக்க குருக்கள் வருகை.

சேபமாலைதாசர் சபையைச் சேர்ந்து அருட் தந்தை வீனஸ் அவகள் இலண்டன் ஒன்ரோறியோ செபமாலை தாசர் சபையில் இருந்து பனிபுரிவதற்காக இங்கு இருக்கும் முன்று தமிழ் குருக்களுடன் நான்காவது குருவாக வந்து சேர்ந்துள்ளார் அத்துடன் அருட் தந்தை சால்ஸ் அவர்கள் இந்த மாதம் ஐந்தாம் திகதி மாலை ரொறொன்ரோ விமாணநிலையத்தில் வருகை தந்தபோது ஊர்காவற்றுறை மக்கள் பலர் அங்கு சென்று அவரை வரவேற்றுள்ளனர் இவர் ரொறொன்ரோ மறை மாவட்டத்தில் மறைபனி புரிவதாற்காகவே வருகைதந் துள்ளார் என்பது அவர்களின் உறவினர் ஊரவர்களின் ஊடாகத் தெரிவிக்கப்பட்டதாகும். இருவரையும் எமது தமிழ் கத்தோலிக்க வெளியீட்டகம் கனடாவில் மறை பனி தமிழில் மென் மேலும் வளரவும் பெருகவும் இவர்களின் உதவி கிடைக்க வருக வருக என வரவேற்கிறது.

## இந்தியாவில் மாதாவின் காட்சி.

இந்தியாவில் கொடைக்கானல் உகார்த்தே நகர் அற்புத குழந்தையேசு கோவில் அருகே மணல் டிராக்கடர் டிரைவர் பன்னீர் செல்வம் திற்கு மாதா கைக்குழந்தையுடன் மார்கழில மாதம் 12ம் திகதி காலை 11 மணிக்கு காட்சி கொடுத்துள்ளார் மேலும் அப்பகுதியில் விறகு எடுக்க வந்த பெண்களான ஜுலிஇ சீலா, பிரியா, நிர்மலா, ஜான்சி ஆகியோருக்கும் மாதா காட்சி கொடுத்துள்ளார். என்று அந்தப் பகுதியைச் சேர்ந்து குருவானவர் வெகுசனத்தொடர்புகளுக்கு செய்தி பகிரும்போது 1531ம் ஆண்டு மெறிசிக்கோ நாட்டில் குவாட்டலோவில் மாதா மார்கழி மாதம் 12ம் திகதி காலை 11 மணிக்கு காட்சி கொடுத்தார் அத்துடன் இப்போது மாதா காட்சி கொடுத்த இடத்தில் ஏழுவருடங்களுக்கு முன்பு பூண்டி மாதா நினைவாக குருசு நிறுத்தப்பட்டிருந்த இடமாகவும் அங்கு மக்கள் ஒன்று கூடி செபிக்கும் வழக்கமாகவும் கொண்டிருந்த இடம் என்றும் ஆர்வத்தடன் அறிவித்தா.

## மாதா சத்துரு சங்காரம்

பூரண கமலப் பொன்னே மின்னே தாரணி புரத்த தற்பரா பரியே! ஆரணச் சபையோர் அர்ச்சனை புரியும் அம்பரா பரியே! இந் நிலத்தோர்க்குத் தம்பமதாகத் தானுதித்தவளே! நோவைச் சலத்தால் நொய்தவராக நாவாயெனவே நவனி வந்தவளே! முள்ளுடம் மரமும் முழு கனலாக எள்ளளவாகிலும் இலைகருகாதே மாறு கொள் பார்போன் மன்னர் முன் நாட்டில் பேறுகள் தோறும் பேறுருத் தானவளே! பசும் பொன் வரிசை பதினாயிரம் பேர் தின் புயத்தவித்த திறலுப்பரிகையே! குவலய முழுதும் கோலது ஓச்சும் சலமோன் ஆலயம் தானானவளே! பாக்கியன் யாக்கோ பரிந்து முன் கண்ட மோட்ச ஏணி முதற் படியானவளே! ஆதமெனும் எங்கள் ஆதித் தந்தையர் தாம் மதமுற உண்ட வம்பகக் கனியால் தீ தகற்றிடவே தேவ பாலகனைப் போதரவாகப் புவியில் ஈந்தவளே! பேதுரு என்னும் பெயர் பெற்ற மாதவற்கு ஏதறு பயோத ரசமீந்தவளே! வறியவன் பேய்க்கு வரைந்த பத்திரத்தால் இறையை மன்றாடி ஈந்த நாயகியே! அவகுணரெம்மை அகலிடாதிரங்கும் காரண ரூபி! கதி பெறு தாபி! மந்திர ரூபி வகையுறு தாபி! சுந்தர ரூபி! சூசையின் தேவி! கந்த முலாவும் கற்பலங்காரி! தானவர் கோவே! தையலர் காவே! ஈனமில் பூவே! எழில் பெறு காவே! மானமிகுந்த மனந்தரு காவே! சத்திய வாமி! தர்ம குணாளி! நித்திய வாமி! எனையாளு மாவி! பற்றினேன் தாயே! பரமருள் சேயே! கற்புக் கனியே! கர்த்தர்க்கினியே! அர்ப்பக் குறையும் அணுகா மணியே! நட்புற்றவர் பால் நாடியே நிற்கும் நந்தாவனமே! நிறை சேர் மணியே! எந்தாபரியே! உமை நம்பினோமே! அன்பாய் எம்மை அருள்வாய் நீயே! வாக்கில் எட்டாளே! மனதில் எட்டாளே! நோக்கில் எட்டாளே! நொடியில் எட்டாளே! பார்க்கில் எட்டாளே! பயனில் எட்டாளே! தம்ப நின்றாளே! தாய் மரியாளே! தாரகை சூழும் தங்கச் சிரமும் ஈர்மதி சேரும் இலங்கிய பாதமும் கர்த்தனை ஏந்தும் கமலக் கையும் பத்தரை மாற்றுப் பசும் பொன் மேனியும் உத்தமமாய் என் உள்ளத்துள் இருத்தி பா நாவாலும் பகர் கருத்தாலும் ஆவே உந்தனை அர்ச்சனை புரிவேன். முத்தே பரகதி மோட்ச நிலையும் வித்தாகமும் என் வெகுமனத் திருத்தி இத்தரை தன்னில் இடர்கள் தீர்த்து நித்தமும் எங்களுக்கு நீர் துணை ஆமென்.

**3..விசு 1..பர 1..பிரி 1..திரு**

இச்செபத்தினை உங்களோடு பகிர்ந்கொள்பவர்

மேரி ஞானபிரகாசம்

## அவர் தாழ் பணிவோமே!

சோதிடர் கண்டு வியந்திடவே வானில் தனித்து மிகச்

சோதியாய் தோன்றிய தாரகை வழி காட்டி நிற்க

சொன்ன ஆடுடம் பலித்ததென வேந்தரும் மகிழ்வில்

பொன் வெள்ளி தூபம் கையில் கொண்டு சென்றனரே.

பஞ்சு மெத்தையில்லை ஆங்கு படுக்கக் கட்டிலில்லை

மிஞ்சு குளிர் விஞ்சிட நைற்த வைக்கோலில் மேல்

மாட்டுத் தொடுவமும் மாழிகையெனக் காட்டிடவே

மீட்பு நல்க வந்த பாலன் துணியில் துயின்றனனே.

அன்னை மரியாள் அருகில் சூசையுடன், கண்மூடி

இன்பமாமாய் தூங்கினார் எம் இளந்தளிர் ஆங்கே

வேந்தர்கள் மூவரோடு, இடையர்கள், விலங்கினமுமாய்

சொந்தங்கள் சொல்லிட முழந் தாழ் பணிந்தனரே

தத்துவ ஞானம் புத்துயிர் பெற்று பாவி எம்மை

இத்தரைதனிலே மீட்டிட எம்மை, அன்புடன் நாடி வந்தனரே

இத் தருணமதில் அவர் தாழ் பணிந்து நாமும்

இங்கு, உலக சமாதானம் கேட்டுக் கை கூப்புவோம்

உன்னத வாழ்வில் உயர்ந்து, சோதியாய் ஒளிர்ந்திட

நன்மைகள் செய்து நற்கனிகள் பல கொடுத்து நாமும்

நடு இரவில், தூங்கும் பாலனாய் மாறிடுவோம்.

நத்தார் நாளில் கூடி உறுதி எடுத்திடுவோம்

மேரி ஞானபிரகாசம்

## இயேசுவின் இணையற்ற பணி

**காலத்தால் சாகாது ஞாலத்தில் என்றும் நிலைத்து நிற்கும்**

(**மா.க.ஈழவேந்தன்** முன்னாள் பாரளமன்ற உறுப்பினர்)

"இறைமைந்தன் இயேசுவை இதயத்தில் ஏற்றுவோம" என்று 2012 இல் நான் வெளியிட்ட காட்டுரை "கதிர் ஒளியிலும்" "கனக தூதனிலும்" "சிறகிலும்" வெளிவந்ததை இங்கு முதலில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.எனினும் கூறியது கூறல் என்ற குற்றத்திற்கு ஆளாகாத நிலையில் இயேசுவின் பல் வேறுபட்ட இறைபணியை நாம் இங்கு நினைவு கொள்ள விரும்புகின்றோம்.

**முகமது நபி**

பல்வேறு மதங்களை தோற்றுவித்த இறைபணியாளர்கள் எவரையும் நாம் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை. நான் சிவநெறி தழுவிய மதத்தைச் சார்ந்தவன் எனினும் இயேசுக்கிறித்து என் இதயத்தில் நிலைத்து இடம் பெற்றதற்கு அவரின் தெய்வீகப் பணியே காரணமாகும். நான் முன்பு குறிப்பிட்டதற்கு அமைய மனித சமுதாயத்தின் சகோதரத்துவத்தை வலியுறுத்திய முகமது நபியையோ நாம் குறைத்து மதிப்பிடவில்லை.

**புத்தர்**

உலக பற்றுக்கள் அனைத்தையும் துறந்தவர் புத்தர். உலகின் நிலையாமைமையை ஓங்கி ஒலித்தவர் புத்தர். துன்பம். துன்பத்தின் தோற்றம் அதனை எப்படி நீக்குதல் என்பதில் அவர் கொண்ட அக்கறை அளவிடக்கரியது.
எனினும் கடவுட் கொள்ளைளைப் பற்றி ஒன்றும் கூறாது சென்றவர்.அதே வேளையில் கர்மவினை காரணமாக பிறப்புக்கள் உண்டு எனக் கூறும் அவர் **உயிர் (ஆன்மா)** தான் இப்பிறப்பை ஏற்கின்றது என்பதை அவர் கூற மறுப்பது எம்மையும் வியப்பில் ஆழ்த்துகின்றது.
முகமது நபி அவர்களோ காட்டு மிராண்டிகளுக்கு மத்தியில் பெரும் புரட்சி செய்து சகோதரத்துவத்தை நிலை நாட்டினார். வாள் கொண்டு எதிரிகளை தாக்குவதை குற்றம் என அவர் கூறவில்லை.

காட்டுமிராண்டி இனத்தை கருணையாள் ஆட்கொள்ள முடியும் என்பதில அவர் நம்பிக்கை அற்ற நிலையில் அவர் வாள் கொண்டு தான் அவர் சிக்கல்களை தீர்க்கவிரும்பினார்.
ஆனால் நம் இயேசுகிறித்துவோ ஏறக்குறைய 2000ம் ஆண்டுகளுக்கு முன்பு ஜெருசலேமிலுள்ள பெத்லேகம் என்னும் இடத்தில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் இவருடைய தோற்றம் அமைகிறது. கருத்தரியா துாய கன்னி மரியாளின் மைந்தனகா ஆண்டவர் அருளால் இக்குழந்தையின் பிறப்பு அமைகிறது. எனினும் உலகியல் வழக்கில் புனித சூசையப்பர் அவரின் தந்தையாக கொள்ளப்பட்டார்.
இயேசுக் கிறித்து இவ்வூலகில் வாழ்ந்தது 33 ½ ஆண்டுகள் தான் .இவர் தனது 12 வது அகவையில் தேவாலயம் சென்ற நிகழ்ச்சி நீங்களாக 30ம் ஆண்டு வரை அவரது வரலாறு எதுவும் நமக்கு தெரியாது. ஆனால் அவர் வாழ்வின் இறுதி 3 1∴2 ஆண்டுகள் உலக வரலாற்றை முற்றிலும் மாற்றி அமைக்கும் முறையில் அமைந்துள்ளது. இப் புவியில் புத்தரின் வாழ்வு 80ஆண்டுகளில் இப்புவியல் நிறைவடைகிறது. முகமது நபியின் வாழ்வோ 64 ஆண்டுகளுடன் முடிவுக்கு வருகிறது.
நாம் எம்மதத்தை சார்ந்தவர்களாக இருப்பினும் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்.கிறித்துக்கு முன் கிறித்துக்கு பின் என்று தான் உலகின் காலம் கணிக்கப்படுகிறது. அந்த அளவிற்கு அவரின் பிறப்பும் இறப்பும் மறைவும் மீள் உயிர்ப்பும் வரலாற்று நிகழ்ச்சியாக வரையப்பட்டுள்ளது.

கிறித்து விரும்பியிருந்தால் ஆளும் மன்னன் ஏரோதுவின் கொள்கைக்கு ஏற்ப வாழ்ந்திருந்தால் சித்திரவதைக்கு ஆளாகி சிலுவையில் அறையப்பட்டு சாகடிக்கப்பட்டிருக்க மாட்டார். அவர் விரும்பியிருந்தால் நான் உண்டு என் மனைவி உண்டு என் குடும்பம் உண்டு என்று கூறி நீண்ட காலம் வாழ்ந்திருக்கலாம்.ஆனால் வாழும் போது அவர் மக்களால் மறக்கப்பட்டிருப்பார். நான் இறைவனின் மைந்தன் நான் இறைவன் கட்டளை நிறைவேற்றவே மண்ணில் தோன்றி உள்ளேன் என்று ஓங்கி ஒலித்து மன்னனின் வெறுப்பையும் பகைமையையும் தேடுவதற்கு காரணமாய் இருந்தார்.

இயேசுக் கிறித்துவுக்கு 12 சீடர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவரான யூதாஸ்கரியோத் என்பவன் 30 வெள்ளிக்காசுக்கு இயேசுவை காட்டிக் கொடுத்து இயேசுவை சிலுவையில் அறைந்து சாகடிப்பதற்கு துணை போனது.காட்டிக் கொடுக்கும் இக் கயமைத் தனம் இயேசு வாழ்ந்த காலத்திற்கு முன்பும் இருந்திருக்கலாம். ஆனால் இயேசுவைக் காட்டிக் கொடுத்தது உலகின் கவனத்தை ஈர்க்கும் செயலாக அமைந்தது.இவ் உட்பகை பல இனங்களின் அழிவிற்கு காரணமாய் இருந்ததை கட்டை பொம்மனை எட்டப்பன் காட்டிக் கொடுத்த நிகழ்ச்சியும் சங்கிலி மன்னனை அவரின் உறவினர் காட்டிக் கொடுத்த நிகழ்ச்சியும். பண்டார வன்னியனை காக்கை வன்னியன் காட்டிக் கொடுத்த நிகழ்ச்சியும் வரலாற்றில் வசைபாடத்தக்க நிகழ்ச்சிகளாக தொடர்கின்றன.

வள்ளுவன் வலியுறுத்தும் உட்பகையின் தன்மை இயேசு கிறித்துவின் காலத்திலும் நிலவியது.இங்கு துயரோடு கூறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்..இயேசுக் கிறித்து சித்ததிர வதைக்கு உள்ளாகி சிலுவையில் அறையப்பட்ட போது தன்னை சிலுவையில் அறைந்தவர்களை “தந்தையே மன்னித்தருளும் இவர்கள் அறியாமையில் செய்கிறார்கள்” என்ற கூற்று ஆயிரம் ஆண்டுகள் உருண்டோடிய நிலையிலும் நிலைத்து இடம் பெற்றுள்ளது.

இக்கூற்று கிறித்தவர்களை மட்டுமல்ல இந்து மதத்தில் புரட்சிச் துறவியாக விளங்கிய வீரவிவேகானந்தரையும் அப்படியே ஆட்கொண்டது.இதனை விவேகானந்தர் பின்வருமாறு கூறுகிறார்.இயேசுவைப் பற்றி கூறுகின்ற கூற்று எம் கண்களில் நீர் பெருகச் செய்கிறது.”கீழை நாட்டைச் சார்ந்தவராகிய நான் நாசரேத்து நல்கிய இயேசு நாதரை இரஞ்சுவதாய் இருந்தால் எனக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு.அதுயாதெனில் அவரை கடவுளாக தவிர வேறு முறையில் என்னால் வழி பட முடியாது என்பதே (விவேகானந்தரின் ஞாபதீபம் துாற்றாண்டு விழா பதிப்பு)1963 பழைய பதிப்பு சுடர் 2.பக்கம் 453)அவர் மேலும் கூறுகையில் “இயேசுக் கிறித்துவை - மனித உருக் கொண்ட தெய்வத்தை நாம் தெய்வமாக வணங்க வேண்டும். உங்கள் வீடு பேறு பெற வேண்டுமானால் இயேசுக் கிறித்துவுடன் நெருங்கிய தொடர்பினைக் கொள்ளுங்கள்.ஏனெனில் உங்கள் எண்ணத்தில் எண்ணுகின்ற எந்தக் கடவுளைக் காட்டிலும் மிக உயர்ந்த நிலையில் இருப்பவர் இயேசுவே.இயேசு ஒரு மனிதரே என்று நீங்கள் நினைப்பீர்களாயின் அவரை நீங்கள் வணங்க வேண்டாம்.இயேசு கடவுள் என்கின்ற உண்மை உங்களுக்கு புலப்படுகின்ற போது அவரை நீங்கள் வணங்கலாம்.”(விவேகானந்தரின் ஞான தீபம் சுடர் 7 பக்கம் 270) விவேகானந்தர் இயேசுவில் முற்றிலும் மூழ்கிய நிலையில் சிலுவை மீது இருந்த சான்றோரை நினைப்பீர்களாக.அவர் தம்முடைய வெற்றிக்காக படை படையாகவுள்ள தேவதுாதர்களை அழைத்திருக்கக் கூடும்.ஆனால் அவர் எதிர்த்துப் போராடவில்லை.தம்மைச் சிலுவையில் அறைந்தவர் மீது இரக்கம் காட்டினார்.ஒவ்வொரு அவமானத்தையும் தீமையையும் பொறுத்தார். எல்லாப் பாவச் சுமைகளையும் தாமே ஏற்றார்.”வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்.நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” என்கிறார்.அவர் நம் வாழ்வின் முறையை காட்டிலும் எவ்வளவு உயர்ந்த நிலையில் திகழ்ந்து நிற்கிறார் பாருங்கள். சிலுவையில்அறையப்பட்ட அந்த பெருந்தகையாரின் சிறப்பையும் அருளையும் நாம் எப்படி அறிய முடியும்? அதன் பெருமையை நாம் உணர முடியுமா?(விவேகானந்தரின் ஞான தீபம் சுடர் 2-பக்கம்-372)

புரட்சித் துறவி விவேகானந்தர் இவ்வூலகில் வாழ்ந்தது. 39 ஆண்டுகள் தான் 33 ½ ஆண்டுகள் வாழ்ந்த இயேசுக் கிறித்துவைப் பற்றி குறிப்பிடுகையில் சிலுவையில் அறையப்பட்ட அந்த பெருந்தகையாரின்

சிறப்பையும் அருளையும் நாம் எப்படி அறிய முடியும் என்று அவர் கேட்கும் கேள்விக்கு நாமும் வழி மொழி கூறி விடைபெறுவோமாக.

## மன்னிப்பு

மன்னிப்பு ஒரு சம்மட்டி, இரும்பான இதயங்களை
உடைப்பதால்

மன்னிப்பு ஒரு மருந்து, புண்ணான மனங்களை
ஆற்றுவதால்

மன்னிப்பு ஒரு வாசல், வேறு திசை இல்லங்கள்
ஒன்று சேர்வதால்

மன்னிப்பு ஒரு சொர்க்கம், நரகமான எண்ணங்கள்
நீர்த்து போவதால்

மன்னிப்பு ஒரு சங்கீதம், ஓலமிட்ட நெஞ்சங்கள்
ஒன்று சேர்ந்து மகிழ்வதால்

மன்னிப்பு ஒரு தேன் கூடு, கலைந்த உறவுகள்
ஒருங்கித்து சங்கமிப்பதால்

மன்னிப்பு ஒரு பஞ்சு மெத்தை, நஞ்சான உள்ளங்கள்
பகை மறந்து இலகுவாவதால்

மன்னிப்பு ஒரு நெடுஞ்சாலை, மேடு பள்ளமான
நினைவுகள் சீராவதால்

மன்னிப்பு ஒரு ஒளிவிளக்கு, பகையான ஞாபகங்கள்
மறைந்து போவதால்

மறப்போம் மன்னிப்போம் அன்பில் சங்கமிப்போம்

திருமதி: ஜீவா மங்கலிக்கா

## குருத்துவம் என்பது

குருத்துவம் என்பது துறவு அல்ல

குருத்துவம் என்பது உறவு!

குருத்துவம் என்பது கடமை அல்ல

குருத்துவம் என்பது கடன்!

குருத்துவம் என்பது அம்பு அல்ல

குருத்துவம் என்பது அன்பு!

குருத்துவம் என்பது அலங்காரம் அல்ல

குருத்துவம் என்பது ஆன்மீகம்!

குருத்துவம் என்பது சுமை அல்ல

குருத்துவம் என்பது சுகம்!

குருத்துவம் என்பது தனிமை அல்ல

குருத்துவம் என்பது இனிமை!

குருத்துவம் என்பது பலம் அல்ல

குருத்துவம் என்பது பாலம்!

குருத்துவம் என்பது தரம் அல்ல

குருத்துவம் என்பது வரம்!

குருத்துவம் என்பது மணிமுடி அல்ல!

குருத்துவம் என்பது முள்முடி!

குருத்துவம் என்பது இகழ்ச்சி அல்ல

குருத்துவம் என்பது மகிழ்ச்சி

குருத்துவம் என்பது பொறுமை!

குருத்துவம் என்பது தம்பட்டம் அல்ல

குருத்துவம் என்பது தன்னடக்கம்!

குருத்துவம் என்பது துணிவு அல்ல

குருத்துவம் என்பது பணிவு!

குருத்துவம் என்பது சாதனை அல்ல

குருத்துவம் என்பது சோதனை!

குருத்துவம் என்பது தாழ்வு அல்ல

குருத்துவம் என்பது வாழ்வு!

குருத்துவம் என்பது யோகம் அல்ல

குருத்துவம் என்பது தியாகம்!

குருத்துவம் என்பது தானம் அல்ல

குருத்துவம் என்பது நிதானம்!

குருத்துவம் என்பது இடம்பிடித்தல் அல்ல

குருத்துவம் என்பது தடம்பதித்தல்!

குருத்துவம் என்பது தொண்டேற்பு அல்ல

குருத்துவம் என்பது தொண்டாற்றல்!

குருத்துவம் என்பது தற்காலிகம் அல்ல

**குருத்துவம் என்பது நிரந்தரம்!**

**குருத்துவம் என்பது ஆதாயம் அல்ல**

**குருத்துவம் என்பது ஆன்ம ஆதாயம்!**

**பம்பைமடு பங்குத்தந்தை அருட்தந்தை:ஜெகானந்தன**

**அன்னை திரேசா இல்லம் (இலங்கை)**






உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் இறுதி நாள் நிறைவு அமர்வில் நான் சிறப்புரை ஆற்ற அழைக்கப்பட்டிருந்தேன். இந்நிகழ்வின்போது எனது தமிழ். இலக்கியப் பணிகளைப் பாராட்டி எனக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது. இம்மாநாட்டிற்கு இலங்கையின் பல்வேறு இடங்களில் இருந்தும் மற்றும் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இருந்தும் தமிழ் அறிஞர்கள், ஆய்வாளர்கள், இலக்கியவாதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

மேற்படி மாநாடு ஆய்வுப் பொன்விழாவாக (1966 - 2016) கடந்த டிசம்பர் 11,12,13 ஆகிய தினங்களில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள இலங்கை மன்ற மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. மூன்று நாட்கள் இடம்பெற்ற இம்மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வில் இலங்கை ஜனாதிபதி பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தாா். (இவர் மூன்றாம் நாள் நிகழ்விற்கு வருகைதர இருந்தவர். ஆனால் தவிா்க்க முடியாத காரணத்தால் இரண்டாம் நாள் நிகழ்வில் கலந்துகொண்டாா்) இறுதி நாள் நிறைவு அமர்வில் கைத்தொழில் வர்த்தகத் துறை அமைச்சர் கௌரவ ாிஷாத் பதியுதீன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விருதுகளை வழங்கி வைத்தாா். சிறப்பு அதிதியாக பிரதி அமைச்சர் அமீர் அலியும் கலந்துகொண்டாா். நீண்ட நெடிய தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழ் மொழிக்கும் சமயங்களுக்கும் இடையிலான உறவு தொடர்பு பற்றியும் இலக்கியத்தின் ஊடாக எவ்வாறு நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது குறித்தும் நான் நிறைவு அமர்வில் உரையாற்றினேன்.





17-12-2016 our lady of Lourdes church children chrismas events dance by Laxya Selvanayagam students.



# அருட்சுடர்

**கத்தோலிக்க புது வாழ்வு தமிழ் பணி கனடா**

**Catholic New Life Tamil Ministry of Canada**

## சொர்க்கத்திலே உறவு இருக்காதாமே!



கணவன் மனைவியைப் பார்த்து சொர்க்கத்திலே கணவன் மனைவி உறவு இருக்காதாமே! என்றான். அதற்கு மனைவி அதனால்தானே அதைச் சொர்க்கம் என்று அழைக் கிறார்கள் என்றாள்.

தென்றலாக ஆரம்பிக்கும் பல குடும்பங்கள் புயலாக மாறிவிடு கிறது. சொர்க்கமாக ஆரம்பிக்கும் பல குடும்பங்கள் நரகமாகி விடுகின்றது. **இயேசுவின் பிறப்பைக் கொண்டாடும் நாமும் அன்னை மரியா சூசை அவர்களின் குடும்பத்தைப்போல் திருக்குடும்பமாக வாழ இறைவனிடம் வேண்டுவோம். கடவுளின் குரலுக்குக் கீழ்ப்படிந்து கணவன் மனைவி இருவரும் ஒருவர் ஒருவரை உளமார அன்பு செய்து வாழ்வோம்.**

## கடவுளை விட்டுப் பிரியாதே, பருந்து பறந்து வரும்.



தாய்க்கோழி தனது பத்துக் குஞ்சுகளுடன் இரை தேடிச் சென்றது. ஒரு குஞ்சு தாயை விட்டு விட்டு தனது வழியில் சென்றது. அதைக் கண்ட பருந்து அக்குஞ்சைக் குறி வைத்தது. தாய்க்கோழி தனது மற்றக் குஞ்சுகளை விட்டுவிட்டுப் பருந்தோடு போராடியது. பலத்திற்கும் பாசத்திற்கும் போர் நடந்தது. இறுதியில் பாசமே வென்றது.

நாம் எப்படியும் வாழலாம், நாம் விரும்பும் பாதையில் செல்லலாம், சுதந்திரமே என் மந்திரம் என எண்ணிப் பலர் கடவுளை விட்டுப் பிரிந்து போகிறோம். தீமையும், பொல்லாப்பும், வேதனையும் நம்மைச் சூழ்ந்து கொள்ளும்போது செய்வதறியாது தவிக்கிறோம். இருப்பினும் அளவில்லாத அன்பு கொண்ட கடவுள் எப்பொழுதும் எம்மைக் காக்க மனுவாக எம்மைத்தேடி வந்தார். **கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் நாம் அவரின் அடைக்கலத்தில் வாழ்வோம். கடவுளை விட்டுப் பிரியாதே, பருந்து பறந்து வரும்.**

**நத்தார் புது வருட வாழ்த்துக்கள்!**
**கத்தோலிக்க புது வாழ்வு குழுமம்!**




## மக்களோடு வாழ விரும்புகிறேன்!



ஒரு கிராமத்தில் ஓர் அழகிய ஆலயம் போரால் இடிந்தது. சிலகாலம் களித்து ஒரு பக்தர் அவ்வாலயத்தை மீண்டும் கட்ட முயற்சி செய்தார். கடவுள் கூறினார் எனக்கு ஆலயம் வேண்டாம் நான் அகதி முகாம்களிலும், அனாதை இல்லங்களிலும் வாழும் என் மக்களோடு வாழ விரும்புகிறேன் என்றார்.

கடவுள் நம்மோடு வாழ விரும்புகிறார். நமக்குள் வாழ விரும்புகிறார். தனிமையில் துணை நிற்க விரும்புகிறார். வேதனையில், சோதனையில் தூக்கிச் சுமக்க விரும்புகிறார். பயணத்தில் பாதையாகிறார், நோயில் மருத்துவராகிறார், மருந்தாகிறார், இருளில் ஒளியாகிறார், இக்கட்டில் விடுவிப்பவர் ஆகிறார். **இக்கடவுளை ஆலயத்தில் வைத்து அழகு பார்க்காமல், நமக்குள் வாழ நம்மை ஆலய மாக்குவோம். இதுவே உண்மைக் கிறிஸ்மஸ் ஆகும்.**

## கடவுளை நம்பு கைதூக்கி விடுவார்!



தண்ணீருக்குள் விழுந்த ஒருவர் தனது இரண்டு கைகளையும் உயர்த்தி ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள் எனக்கு நீச்சல் தெரியாது நான் சாகப் போகிறேன் என்று கத்தினார். கரையில் நின்றவர் கூறினார் எனக்கும்தான் நீச்சல் தெரியாது உன்னைப்போலவா கத்துகிறேன் அமைதியாய் இரு என்றார்.

நாம் துன்பத்தில் வாடும்போது அதை மற்றவர் புரிந்து கொள்ள வேண்டும் என விரும்புகிறோம். யார் என் கதையைக் கேட்பார் எனத் தேடுகிறோம், வசதி கிடைத்தால் பகிர்ந்து கொள்ளுகிறோம். முடிவில் நம்மைப் புரிந்து கொள்ள யாருமே இல்லையா என ஏமாற்றம் அடைந்தவர்களாகக் காணப்படுகிறோம். மனிதரால்

முகத்தைத்தான் பார்க்க முடிகிறது. ஆனால் கடவுளால் மட்டுமே நமது உள்ளத்தைப் பார்க்க முடிகிறது. நாம் மனிதர்களை நம்புவதைவிடக் கடவுளை நம்பினால் கடவுள் எம்மைக் கைதூக்கி விடுவதைக் காண்போம். **கிறிஸ்துவின் பிறப்பினைக் கொண்டாடும் நாம் நம்மை மீட்டு வாழ வைக்க வந்த மீட்பரையே நம்புவோம்.**

## நீ காலால் மிதிபடும் கல் அல்ல!



வழியில் கிடக்கும் ஒரு கல்லை பலர் வெறுங் கல்லாக மட்டும் பார்த்து அதை மிதித்துச் சென்றனர். ஆனால் ஒரு சிற்பியோ அதில் மறைந்திருக்கும் சிற்பத்தைக் கண்டு அதைச் சாமி சிலையாக வடித்தார். காலால் மிதித்த அக்கல்லை அனைவரும் கைகூப்பி கும்பிட்டனர்.

நீங்கள் காலால் மிதிபடும் கல்போல் இருக்கலாம். எல்லோராலும் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு வேண்டாதவராகத் தள்ளப்படலாம். குயவனாகிய கடவுளோ உங்களைப் புதிய பாத்திரமாகப் பார்க்கிறார். அவர் கரங்களில் வந்தால் எல்லோராலும் வெறுக்கப்பட்ட உங்களை எல்லோருக்கும் ஆசீர்வாதமாக இருக்கும்படி மாற்றுவார். **கிறிஸ்து பிறப்பு விழா உங்களைப் புதிய பாத்திரமாக மாற்றுவதாக!**

## கடவுளாகக் காட்சியளிக்கிறோம்.



பணக்காரன் வீட்டில் வேலை செய்யும் பிள்ளை களைப்பால் பணக்காரனின் பஞ்சு மெத்தையில் படுத்துவிட்டான். அதைக் கண்ட பணக்காரன் அவனை வன்மையாகத் தண்டித்தான். அச்சிறுவனோ அழுவதற்குப் பதிலாகச் சிரித்தான். பணக்காரன் கோபத்தோடு ஏன் நீ சிரிக்கிறாய் என வினவினார். சிறுவன் கூறினான் கொஞ்சநேரம் படுத்த எனக்கு இந்தத் தண்டனை என்றால், எப்பொழுதும் படுக்கும் உங்களுக்கு என்ன தண்டனை காத்திருக்கிறது!

எம்மைப்போல் பிறரை நேசிக்க வேண்டும் என்பது கடவுளால் எமக்குத் தரப்பட்டிருக்கும் அன்புக் கட்டளையாகும். **பிறரின் நிலையை எப்போது நாம் புரிந்து கொள்ளுகிறோமோ அங்கேதான் கடவுள் நம்முலம் வெளிப்படுகிறார். அங்கே நாம் கடவுளாகக் காட்சியளிக்கிறோம். இயேசுவின் பிறப்பு இந்தச் செய்தியையே எமக்குக் கூறி நிற்கின்றது.**


## கிணற்றுத் தவளை!



கிணற்றுக்குள் வாழ்ந்த தவளை நினைத்தது இவ்வளவுதான் உலகம், இவ்வளவுதான் வாழ்க்கை என்று. ஒரு நாள் கிணற்றில் நீர் நிரம்பி வழிந்தபோது கிணற்றின் மேல விளிம்புக்கு வந்தது அத்தவளை. அது முதலில் கண்டது பெரிய ஆற்றை. அதற்குள் அது தாவிச் சென்றது. அது கண்டது எங்கும் தண்ணீரை.

நாம் கடவுளிடம் வரும் வரைக்கும் காண்பது சிறிய உலகத்தையும், துன்பம் வேதனை நிறைந்த வாழ்வையுமே. ஆனால் எப்பொழுது நாம் ஆண்டவரின் அடைக்கலத்தில் வாழ ஆரம்பிக்கின்றோமோ அப்பொழுது கடவுள் காட்டும் புதிய உலகத்தை அதாவது, தூய்மை, நம்பிக்கை, மகிழ்ச்சி, சமாதானம் நிறைந்த உலகத்தைக் காணமுடிகிறது. **கிறிஸ்து பிறப்பு விழா இத்தகைய புதிய உலக வாழ்வுக்குள் எம்மை அழைத்துச் செல்லட்டும்.**

## பறவைக் காய்ச்சல் நோய்!



மாணவர்கள்: நமது வகுப்பு ஆசிரியருக்கு பறவைக் காய்ச்சல் நோய் உள்ளது. ஏனெனில் அவர் விடைத்தாள்களைத் திருத்தும்போது எல்லோருக்கும் முட்டை முட்டையாகப் போட்டுத் தள்ளுகிறார் என்றார்கள்.

ஆசிரியரால் பிழையான விடையளிக்கும் மூடர் களுக்கு முட்டைதான் கொடுக்க முடியும். கடவுளால் மூடர் களையும் ஞானிகளாக மாற்ற முடியும். **இயேசு உங்கள் உள்ளத்தில் பிறந்தால் நீங்கள் வாழ்க்கை என்னும் பாடத்தில் பல வெற்றிப் படிகளில் ஏறிச் செல்ல முடியும்.**


**Catholic New Life Tamil Ministry**
Bro.Jesu Thavarajan
647-876-2734
tamilnewlife.com

# 2017 ம் ஆண்டு நிகழ்ச்சி நிரல்கள்.

## அன்புமக்களே

“அன்புமக்களே” கத்தோலிக்க மாதாந்த சஞ்சிகை மாதந்தோறும் வெளியிடப்படும். விரும்பியவர்கள் ஆக்கங்களை விளம்பரங்களையும் அனுப்பி வைக்குமாறும். சஞ்சிகை மாதாந்தம் பெறுவதற்கு சந்தா முறையில் இணையவும் கேட்கப்படுகிறீர்கள்.

## “பரம்பொருள்” தமிழ் கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சி

“பரம்பொருள்” ஒவ்வொரு வாரம் தோறும் கீதவாணி வானொலி ஊடாக நடைபெறும்.
இவற்றில் திருப்பலி வார்த்தை வழிபாடும் கேள்வி பதிலும் மாலை 5.00 மணிதொடக்கம் 6..00 மணி வரை நிறைவு செய்யப்படுகின்றன உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்கள் செவிமடுக்கும் ஒரு தமிழ் கத்தோலிக்க நிகழ்வாகும். இந்த நிகழ்வை நீங்களோ அல்லது உங்கள் உறவினர்களோ வானொலிப் பெட்டி இல்லாவிட்டால் கனணியில் www.geethavaani.com இணையத்தின் ஊடாகவும் கேட்கலாம்.

## திருப்பலி

லூர்து மாதா ஆலயத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 5.00 மணிக்கு தமிழில் தொடர்ந்து 30 ஆண்டுகள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

## சிலுவைப் பாதை

புனித லூர்து மாதா தேவாலயத்தில் தபசு காலத்தில் எங்கே சுமந்து போறீர் என்ற பழைய சிலுவைப் பாதைப் பாடல்களுடன் ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் மாலை 6.00 மணிக்கு சிலுவைப்பாதை நடைபெறும். இதுவும் கடந்த 30 ஆண்டுகளாக நடைபெறுகின்றது.

## ஞானொடுக்கம்

பங்குனி மாதம் 14ம் திகதி செவ்வாய்க்கிழமை சிலுவைப்பாதையுடன் திருப்பலியும் நிறைவேற்றப்படும். அன்றைய தினம் மாலை 6.00மணிக்கு சிலுவைப்பாதை ஆரம்பமாகி திருப்பலியுடன் மாலை 8.00மணிக்கு நிறைவடையும்.

பங்குனி மாதம் தவக்காலத்தின் 3ம் வாரம் சனிக்கிழமை 18ம் திகதி தவக்கால ஞானொடுக்கம். காலையில் 9ம் மணிக்கு ஆரம்பமாகி மாலை 6.00 மணிக்கு நிறைவுபெறும்.

## சிலுவைப் பாதையும் வயோதிபக் குருக்களையும் தரிசிப்பது.

சித்திரை மாதம் முதலாம் திகதி பிக்கிறிங்கில் 2325 லிவோர்ப்பூல் வீதியில் அமைந்திருக்கும் இயேசு சபைக் குருக்களின் தியான நிலைய வெளியரங்கில் அமைந்திருக்கும் சிலுவைப்பாதையும் அங்கு இருக்கும் வயோதிபக் குருக்களையும் தரிசிக்க இருக்கிறோம் வர விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் தமிழில் நடைபெறும்.

## *போத்துக்கல் புனித பற்றிமா மாதா காட்சி கொடுத்த நூறாவது ஆண்டு விழாவுக்கு திருயாத்திரை*

**பற்றிமா மாதா காட்சி கொடுத்த நூறாவது ஆண்டை முன்னீட்டு நடைபெறும் 100 வது விழாவில் பங்கெடுக்க போத்துக்கல் செல்வதுடன் புனித லூர்து அன்னை தலத்தையும் தரிசிப்போம் வைகாசி மாதம் 06 திகதி. தொடக்கம் வைகாசி மாதம் 15ந் திகதி வரையும்.**

புனித லூர்தன்னை திருத்தலம் பிரான்ஸ் நான்கு நாட்களும் போத்துக்கல் புனித பற்றிமா மாதா தேவலயத்தில் நான்கு நாட்களும் தங்குவோம் பிரான்ஸ் தமிழ் திருபயணிகளுக்கான ஆன்மீகக் குருவாக பணிபுரியும் அருட்தந்தை லீனஸ் சொய்ஷா அவர்கள் எங்களுடன் திருத்தல யாத்திரையின் போது வழிநடத்துபவராகம் ஞானக் காரியங்களை தமிழில் நிறைவேற்றுபவராகவும் எங்களுடன் இப்பார் வர விரும்புகிறவர்கள் 2017ல் பங்குனி மாதம் 31ம் திகதிக்கு முன்பு எங்களுடன் பதிவு செய்ய வேண்டும் பதிவு செய்பவர்கள் தகுதியான கடவுச்சீட்டுகளின் இலக்கம் அவற்றில் உள்ள பெயர் போன்றவற்றுடன் பதிவு செய்யும்படி வேண்டிக்கொள்கிறோம்.

## புனித அந்தோனியார் திருவிழா லூர்துமாதா தேவாலயத்தில்

புனித அந்தோனியார் திருவிழாவை முன்னிட்டு 11,12,ம் திகதிகளில் புனித லூர்துமாதா தேவாலயத்தில் ஆராதனைகளும் திருநாள் அன்று 13ம் திகதி திருவிழா ஆராதனையும் சுற்றுப்பிரகாரமும் நடைபெறும்

## லூர்துமாதா தேவாலய நிதிக்காக நாடக விழா

ஆனி மாதாம் 24ம்திகதி 2017ம் ஆண்டு புனித லூர்து மாதா தேவாலய நிதிக்காக புனித லூர்து மாதா கத்தோலிக்க பாடசாலையில் நாடக விழா நடைபெறும் கடந்த முப்பது வருடங்கள் தமிழ் கத்தோலிக்க மக்கள் மூவாயிரத்திற்கு மேற்பட்ட முறைகள் இந்தத் தேவாலயத்தில் ஒன்று கூடவும் விழாக்கள் திருவழிபாடுகள் நிறைவேற்றவும் பயன்படுத்தப்பட்ட இப்புனித ஸ்தலத்திற்காக நமது சிறிய துலி உதவியாக இவ்விழாவை முன்னேடுப்போம் தயவு செய்து எல்லோரும் உதவி செய்யுங்கள்.

## இலண்டன் யாத்திரை இல்லத்தில் மடுத்திருவிழா

ஆடி மாதம் 1ம் திகதி செபமாலை தாசர் சபை வழிநடத்தும் இலண்டன் ஒன்ராறியோ யாத்திரைதலத்தில் மடுமாதா திருவிழா ஐந்தாவது வருடமாக நிறைவேறும் கனடா நாளாகவும் நாம சென்று கனடாக் கொடி, நமது கத்தோலிக்க மக்களின் கொடிகளை முறையே கனடாக் கீதத்துடன் கம்பத்தில் உயர ஏற்றி செப வழிபாடுகள் நிறைவு செய்து உணவுகள் பரிமாறி மகிழ்ந்து வருகின்றோம் ஒரு முறை வந்து பாருங்கள்.

## மிட்லன் வேதசாட்சிகள் வருடாந்த யாத்திரை

ஆடி மாதம் 15ம் திகதி சனிக்கிழமை கனடிய வேதசாட்சிகள் திருத்தல யாத்திரை செல்ல உள்ளோம் கடந்த முப்பத்தியொரு வருடங்கலாக பேரூந்து சேவைகள் ஒழுங்கு செய்துவருகின்றோம் தொடர்பு கொள்ளுங்கள்.எங்கள் தொலை பேசி இலக்கத்துடன்.

## கனேடிய தேசியத் திருயாத்திரை

ஆவணி மாதம் 4 .5. 6ம் திகதிகளில் ஆறுதல் அளிக்கும் ஆன்மீகத் திருயாத்திரை புனித சூசையப்பர் தேசிய யாத்திரைத் ஸ்தலம். புனித மேரி மெடலின் தேசிய திருயாத்திரை ஸ்தலம் புனித அன்னாம்மாள் தேசிய திருயாத்திரைத் ஸ்தலங்களுக்கு திருப்பயணம் நடைபெறும்.

## மடுத்திருவிழா மேரிலேக்கில்

ஆவணி மாதம் 12ம் திகதி மேரி லேக்கில் மடுத்திருவிழா நடைபெறும்.

## அமெரிக்கப் பயணம்

புரட்டாசி மாதம் 1ம் . 2ம் திகதிகளில் கிறோசிற்றி Back to school. புனித வெற்றி மாதா . புனித பற்றிமா மாதா .கண்மணி மாதா யாத்திரைப் பயணம் நடைபெறும்.

## ஞானொடுக்கம்

புனித லூர்து மாதா தேவாலயத்தில் மார்கழி மாதம் 9ம் திகதி திருவருகைக் காலத்தின் ஞானொடுக்கம் இறை யேசுவின் வருகையின் இயல்புகளையும் பிறப்பையும் விபரும் பெற்று விசுவாசமடைய விளக்கங்களுடன் தியானமும் திருப்பலியும் நிறைவு செய்யப்படும்

## சிறுவர் ஒளிவிழா

புனித லூர்து மாதா பாடசாலையில் மார்கழி மாதம் 16ம் திகதி 2017ம் ஆண்டு சிறுவர்களுக்கான ஒளி விழா நடைபெறும். இவ்விழா உங்கள் பிள்ளைகளின் ஆற்றல் வளர்ச்சிகளை வெல்லோட்டம் செய்து வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்ப மேடையாக பணன்படுத்துங்கள்.

## தமிழில் நத்தார் திருப்பலி

24ம் திகதி இரவு 8.00 மணிக்கு தமிழ் கரோல் பாடல்கள் அதனைத் தொடர்ந்து 8.30 மணிக்கு தமிழில் திருப்பலி நடைபெறும்.

## தமிழில் 2018ம் ஆண்டு புதுவருடத் திருப்பலி

31ம் திகதி இரவு 11.00 மணிக்கு தேவநற்கருணை எழுந்தேற்றம் (பாவ மன்னிப்பு வழிபாடும். நன்றி வழிபாடும்) நடைபெற்று அதனைத் தொடர்ந்து 12.00 மணிக்கு புதுவருட திருப்பலியும் நடைபெறும்.

A. மௌன ஞானோடுக்கம் மேரி லேக் ஆலயத்தில் நடை பெறும்.

B. உளவியல் கருத்தரங்குகள் (குடும்பம். உறவு. சூழல்)

C. போதைவஸ்துக்கு அடிமையானவர்களுக்கான உளவியல் கருத்தரங்குகள் பெற்றோர். பிள்ளைகளுக்கு நடைபெறும்.

**மேலே தரப்பட்டுள்ள தகவல் அனைத்துக்கும் மேலதிக விபரங்கள் பெற விரும்புகிறவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்**

**647 348 5100**

“அன்பு மக்களே”

1995 ஆண்டு ஆனி மாதம் தொடங்கி இன்று வரை தமிழ் கத்தோலிக்க மாதாந்த சஞ்சிகையாக இயங்கி வருகின்றது.
அத்துடன் தொடங்கிய காலம் தொட்டு இன்று வரையும் தமிழ் கத்தோலிக்க சமூதாயமோ ஏனைய சமூதாயங்களோ விமர்சிக்கா வண்ணம் எந்த எதிர் மறையான தகவல்களும் தேடியும் கிடைக்காத முறையில் எழுதப்படுகிறது.
கனடா வரலாற்றில் அறிவியலுக்கும் ஆன்மீகத்திற்கும் திருயாத்திரைகள் சுற்றலாக்கள் நடத்தி பல ஆயிரக்கனக் காணோரை கனடாவிலும் அமெரிக்காவிலும் தடம் பதிக்க துணை நிக்கின்ற உழைக்கின்ற சஞ்சீகை எனலாம்.
கனடாவில் தமிழ் சமூதாயத்தில் தமிழில் கத்தோலிக்க சமூதாய வழிபாட்டு முறைகளையும் விசேட நிகழ்வுகளையும் தமிழில் தக்க வைத்துக்கொள்ள உதவிய மாதாந்த சஞ்சிகை.
கத்தோலிக்க சமூதாயத்தில் மட்டுமல்ல பிற மத சகோதரர்களுடன் ஓர் உறவை வளர்க்கும் பாலமாக திகழ்ந்து கொண்டிருந்தது என்றால் இது மிகையாகது.

**பீற்றர் மரியதாஸ்**

# நிலை நிக்கும் காலம்.

ஊற்றுப்பேனாவை கைமாற்ற விரும்பாத காலம் மாறி
கை பேசி விளையாட்டுப் பொருளாக மாறிய
காலமிது
யாவேயின் பெயர் சொல்ல தயங்கிய காலம் மாறி
இயேசு பாலன் எடுப்பார் கை பிள்ளை ஆன
காலமிது

மார்க்கம் மட்டும் விழா எடுத்த காலம் மாறி
உலகமே விழா எடுக்கும் காலமிது
விளக்கம் புரியுதோ புரியவில்லையோ
அலங்காரம் செய்து கொண்டாடும் காலமிது

காலம் மாறலாம் கால நிலையும் மாறலாம்
வாழ்வும் மாறலாம் மன நிலையும் மாறலாம்
அந்தஸ்து மாறலாம் வாழ்விடமும் மாறலாம்
பாலன் பிறந்தநாள் நினைவு மட்டும் மாறாதே

உலகாண்ட மன்னர்கள் கொடிகட்டிப் பறந்த காலம்
பேரோடு புகழோடு சீர் சிறப்பாக வாழ்ந்த காலம்
வரலாற்றுப் பதிவில் மனதை விட்டு அகன்ற காலம்
இயேசு மட்டும் பாலனாக அரசராக நிலை நிக்கும்
காலம்

**காவலூரான்.**